## மூன்றாவது நதிகளுக்கு

ஒவ்வொரு அசைவிற்கும்
உள்ளலை கொள்ளும் வைரப்பளீரிடலாய்,
காற்றை வாரியணைக்கக் கரங்களில் பெருகும்
காட்டாற்றுத்தினவாய்,
உடைந்து விடாதபடி குமிழ்களை
அடைகாத்துக் கொள்ளக்
கடுந்தவமியற்றும் மனதின் காலாதீதமாய்
அசந்த நேரத்தில் வசப்படுத்தி விட்ட இந்த
உயிர்ப்பின் ரஸவாதத்தை
ஊமையாய் சுமந்து கொண்டிருக்க முடியவில்லை
உரக்கப் பாட வேண்டும்
கண்டம் கானாமிர்தமாய்
காடுமலை மேடெல்லாம் கரைந்துருகப்
பாடிப் பரவ வேண்டும்
அண்டசராசரமும் காண
ஆனந்தக் கூத்தாட வேண்டும்
வரவேற்பிற்கும் பிரிவுபச்சாரத்திற்கும்
இடைநிரம்பியது வாழ்க்கை
வழியில்
ஆறாவதிலோ, அடுத்த மரத்திலோ
எனக்கான அம்பு
அழியு முன்
என் உயிர்க்கோலப் புள்ளிகள்
கோடுகளையெல்லாம்
கொண்டாடி விட வேண்டும்
உன்னையும்
அனந்தேட்டா!
அறிய மாட்டா யென்னை
அதனாலென்ன?
ஹாம்லெட்டுக்கும் தெரியாது.

RangaRakes
tamilnavarasam.com

## கோனார்களுக்கு

**பொ**ருளகராதியேறிப் புறப்பட்ட அம்மணக் 'கோ'
பறவைப் பரிபாஷைக்குப் பதவுரையாக்க
விரியத் திறந்தான் வெறுங்காதை.
நிரம்பியது புரியாமை.
பெருங்கோபமாய் அண்ணாந்து வில்லிழுக்க
உறுகாயமேதுமின்றிப் புள்
பறந்தது உயருயரே.
'போகட்டும், பறவை பேசுமோ?' என்றான்.
பரிவாரங்கள் 'அதானே' போட
'பேசாதது பாடுமோ?' என்றான்.
பின்னும் படை தலையாட
புரையோடும் வெறியில்
பார்வை மீறிய பறவையே பொய்யெனப்
பகர்ந்தவனைப் பாராமல் வெளிபரவித்
திரியும் களிபறவைக்குக்
கண்டம் காணிநிலம்.



## கவித்தடம்

**வ**ராப் புரவியின் குளம்போசை
பெறாப்பெரும் பேறாய் வெகு அருகில்
கேள்பொழுதில்
காதடைக்க கண்மயக்க நான் சரிந்த
முட்பரப்பைத்
துப்புரவாக்கும் அருவக்கைகள்
முனையெல்லாம் துருநீக்கி யுருவேற்றும் போர்க்கூர்.
தப்ப முடியாமல்
நாணிழுப்பவன் கணையெல்லாம் சொல்
சொல்லனைய
ஆன மட்டும் தாங்கிய ஊனுருகியிறுகி
அணையப்
பெறும் வலி வானமுதம் போல்...
உறக்கத்திற்கும், சாகாடிற்குமிடை
ஊசலாடி
கயிறறுந்த போதத்தில் கண்டதென்ன?
கவியிருளில் தொடர் குளம்போசை.
அறிவறியும்-
அம்மணராஜாவாயிருக்க லாகாது
ஆரோகணித்திருப்பது.
வால்பிடித்தேனு மேக
வெளி நீளும் கை வலுவற்று.
வழுவழுக்காயம் பரவ
காட்டுத் தீ உயிர் பற்ற
பனிமனிதன் வழித்தடங்கள்
காணக் கிடைக்கு முன்
கண்மூடலாகாது.
கற்க வேண்டும் இனியேனும் ஓசையின் பாஷை.

RangaRakes

tamilnavarasam.com

## தபசி

**மோ**னத்துவம் தினம்.
மனக்கால்கள் இற்றுக் கனக்கின்றன.
புற்று சுற்றிலும்...
முற்றுமறிந்து மறந்தாரை கடிக்காது சற்றும்.
கடித்தாலும் கடுக்காது.
இங்கே இரண்டும், பிறவும்.
குறிக்கோளற்றதாலோ?
அறியப்படாதது அற்றதாமோ?
(எதிரே வந்துவிட்டால் எதைக் கேட்க?)
அறியப்படுமோ? அரைகுறையாகவே
புரிந்து விடுமோ?
அறியாததே வரமோ?

## இரண்டற...

**தே**கத்தைத் தனியாக்கத் தான்-
தூரத்தே 'கோட் ஸ்டாண்டி'ல் மாட்டத் தான்
நாட்டம்...
எனில், ஜுரம் வந்தால் சுரமிறங்கி,
புதிதுடுத்தால் குதூகலித்து,
காவியக் காதலிலும் கரங்களும் பங்கெடுத்து...
எருவும் தருவுமாய் இரண்டும்.
எரு தரு அவரவர் விருப்பப்படி.



## அடைந்தது

**மே**கத்தை மனம் தொட எண்ணினாலும்
தேகத்திற்கு சம்போகம் மண்ணோடு தான்.
தொடக் கிடைத்த மேகமும்
விரலிடுக்கில் கசிந்து போகும்.
ஏகமாய் விழைவெதற்கு?
சாகும் வரை பூமி சாசுவதம்!

## கடை

**தி**னமுமாய் அந்தக் கடைப்பெயர்
கண்ணுக்கு இடம்பெயரும்.
பெயர்க்காரணமறிய மனம் வியர்வை பெருக்கும்.
படி தாண்டிப் போய் கேட்கப்
பிடிப்பில்லை.
வினவாதவரை விடைகள் ஆயிரம்!

RangaRakes
tamilnavarasam.com

## சூழல்

மண்ணின் சூழல் மனங்களைச் சேரும்.
மனச் சூழலாலும் மண் நிறம் மாறும்.
ஒன்றிலிருந்தொன்றாய், ஒன்று மற்றொன்றாய்...
உன் கண்புறத்தே மழை; கனத்த இருள்.
உள் பரவுமோ... அன்றி, உட்தெளிவின் ஒளியில்
வெளி யுலர்ந்திடுமோ... புலர்ந்திடுமோ...

## தேடல்

தேடுகிறேன்.
உடனோடி மண்ணளைந்து
எதைத் தேடுகிறாய், என்ன தொலைத்தா யெனத்
துளைத்தெடுத்தார்கள்.
"எதையோ தொலைத்து விட்டேன். ஏதெனத்
தேடுகிறேன்," என்றேன்.
பேதையாய்ப் பார்த்துத் தம் பாதை யேகினர்.
நான் தேடுகிறேன்.



## ஆறு

சுவடுகளின் மேலாய் பதியும் சுவடுகள்.
பாதங்கள் பட்டுப் பட்டுத் தேய்ந்த பாதை.
முதல் சுவடறியும் வலி இதயத்துள்.
காலடிகளில் எத்தனை ஜாதைகள்?
கணக்கறியும் பித்தத்தில் சித்தங் கலங்கும்.
பதிந்ததன் மேலாய் பல பதிந்து பதிந்து பதிந்து...
அதிகமோ அழிந்தவை...?
வழக்கெதற்கென்றறியாது வழக்காடி வழியோடி
இன்னும் சில சுவடுகள் ஜனனம்.
எண்ண, ஆறு ஒன்றே தேறுமாறு!

## நிவாரணி

'மெய்யாய் விழைந்துள்ளங் கையை முகர
பழ வாசம் பரவும் சுகமாய்...!'
வலி யடித்து யிர் துடிக்கையில்
யாசகமாயவ் வாசகத்தை உள் பேச-
இல்லாதது போலிருக்கும் வலி.

RangaRakes
tamilnavarasam.com

## வயதின் வயது

'காமிக்' கிடைக்கக்
குழந்தை யாகி
கனவில் நினைவில்
கிளர்ந்திளமை யாகி
மனங் கனக்க
மூப்புணர்ந்து-
வயோதிகமென்பது வயதா?

## பொது

நானவனைப் பிற்போக்கென,
அவன் அவனைப் பிற்போக் கென,
மூன்றாமவனுக் கொரு நான்காமவன்;
நான்காமவன் நானேயும்...
நீட்டலாய், வட்டமாய்
சுழற் கேடயம் கரமாற்றம்.
வார்த்தைகள் கலவை யாகா காரணிகளாய்...



## வழக்கு

நானென்னை முற்போக்கென
அவன் அவனை முற்போக்கென
நண்பனெனில் பின் முன்னாய்.
அன்றெனில், முன் பின்னாய்...
சொற்பொருள் கலைந்த திரவநிலையில்...

## தேர்ச்சி

அந்தப்புரமாகாமல் அந்தப்புறமாகி
சொந்தங்களை சந்தித்ததும்
செங்கல் செங்கல்லாய் சுவரெழுப்பிக்
கொண்டதும்
சரித்திரம்.
இன்று சுகமோ சோகமோ-
சுவர் ஸ்திரம்.

RangaRakes
tamilnavarasam.com

## எல்லை

காணும் பெண்ணையெல்லாம்
சோதரியாய் பேண வியலாது.
போலவே-
காதலியாய் காணலும்.

## பட்டறிவு

வெட்டுங்குத்துமாயிருந்தது நிலம்.
விட்டு நீங்கி
மற்றொருலகம் எட்ட-
மறுபடி வெட்டுங்குத்தும்.

## இடம்

வலிமையோடிருந்தேன் மூலையில்.
வலிந்திழுத்ததாய் வெளியளக்கக் கிளம்பி
வலி மிகக் கலங்கித்
திரும்ப-
மூலையெங்கே...?



## ஈவு

சகலதும் இங்கே சுலபந் தான்-
ஆரவாரமற்றிருத்தல் தவிர.
அன்பைச் சுரண்டாப்
பெருந்தன்மை தவிர.
தன்னைப் பிரகடனம் செய்யாப்
பேராண்மை தவிர.
அன்ன பிற தவிர தவிர.

## பிரிவாற்றாமை

ஒரு புதன் திரும்ப வருவதாய்ச் சொன்னாய்.
புதன்கள் பல உதயாஸ்தனமாகி விட்டன.
உன் வருகையில்லை.
இதயமொடியும் வருத்தமெனக்கு.
வந்து போன புதன்கள் இனி சொந்தமாகாதே என்று!

RangaRakes
tamilnavarasam.com

## இருப்பு

ஏதற்குப் பொய் சொல்வது?
நிதமும் குருவியைப் பார்த்தும் பாராது நான்.
அது அதன் போக்கில் அரிசி கொறிக்கும்.
அங்குமிங்கும் நடக்கும், பறக்கும்.
அடையாளங் கண்டு இணை வர-
உடனிருக்கும்.
அண்டங்காக்கை யெதிராய்
அப்பிராணியாய் ஒதுங்கும்.
நான் என் பாட்டில் வீட்டில்...
அதிசயமாய் சில தருணங்களில் குருவியைத்
துருவும் விழி.
புறத்தையும் உட்புறத்தையும்!
சிறகு குறித்து வருத்தமும் பொறாமையும்
சேரும்!
அகல அதன் வாய் திறந்து
அகிலம் பார்க்கத் தோன்றும்!
அரிசி பொறுக்கித் தரும்
பிரியமுண்டாகும்!
வருடித் தர, நெருங்கி வர
உருகும் பரிவெங்கும்!
கைகொடுக்க அடியெடுக்க
அடிப்பதாய் துடித்து விலகும் அது.
வலிக்கும் மனது.



அப்போதுகளில் ஒன்றில்
திடுமெனக் குருவி யெழும்பி
சுவற்றுப் பல்லியை கவ்வ,
பல்லி வால் பட பட்க்க,
பறவை சிறகடிக்க-
இருப்பின் திறம் அறிந்து
இறந்தேனே இறந்தேனே...

## வலைப்பின்னலமைப்பு

ஏன்ன வசியப் பிசினோ-
என்றுமாய் சிலந்திவலையுள் அலைந்தபடி...
தளையறுத்து வரல் எளிதில்லை.
வெளியோ, உள்ளோ வலுவில்லை.
களைப்பழிக்க மூடும் இமைக்கப்பால்
கண்கள் தேடியபடியே...

RangaRakes
tamilnavarasam.com

## முடிந்தது

பறக்கப் பேராசை!
இதயத்தை சிறகசைத்தசைத்து
சலித்து விட்டது.
கரங்களை விரித்துயரத்
துணிவு வரவில்லை.
பறக்காமல் மரிப்பேன் எனப்
புரிகிறது அறிவுக்கு.
ஆசையைப் பறக்க விடுகிறேன்!

## மாற்றம்

சப்தங்கள் வார்த்தைகளாகா...
சொற்கள் சப்தங்களாகா...
சப்தங்கள் சொற்களாய், சங்கீதமாய்
கேட்கும்!
வார்த்தைகள் நாராசமான பேரோசையாகும்.
விருப்பும் வெறுப்பும் வெறுமையும்
எரிதழல், திரவ, திடப் பொருள்கள்-
கிரியாவூக்கியாக.



## இங்கே

ஆடு புலி புல்லுக்கட்டும்
மனிதனுமாய் அவரிவர்...
ஆடு புல் மேய
புலி யாட்டை மேய
ஆள் மேய ஆளிங்கே-
புல் மேயக் காலெங்கே?

## பின்நோக்கி

இருக்கச் சொல்லியிருந்தால் இருந்திருப்பேனோ?
வருந்தியிருப்போமோ பின் இருவரும்?
நிறைவில் கறை கூடா தென்றா
விடை கொடுத்தாய்?
நினைப்பாயோ என் மனதால்?
நீ இருக்கச் சொல்லவில்லை.
நான் இருக்கவில்லை.

## துறவு

உறுத்துப் பார்க்க இருவிழி தவிர
எரிவதில்லை யெதுவும்.
புரிய-
ஒரு பூனை கண்ணை மூடிக் கொள்ளப்
பார்க்கும்.

RangaRakes
tamilnavarasam.com

## கண்கட்டி...

விரைந்து நடக்கையில் மறைவிருந் தொரு கை
சொடுக்கி யிழுக்க
மடங்கி மண்தொடும் உடல்...
அடியினும் அடையாளங் காண லாகா
வலி அதிகமாய்.

## மோனம்

முகர முடியும்
நாசியுள் ளோடி
நாளமெல்லாம் நிரம்பி
வாசம் பரவும்
நிசப்தம்.
ஆளலைக்கா நீர்த்தேக்கமாய்
அடிமனதில் நிர்மலம்.
அரைக்கணத்தில் ஒரு மறுபிறப்பு.
அருகாய் அடுத்த கல்...



## வயது

குழந்தையோடு குழந்தையாய்க் குழலூதினேன்.
'கோலி' விளையாடினேன்.
மழலையில் குழறி அழுதேன்.
சொரசொரத்த தரையில் முழங்காலுராய
முட்டுக்குத்தினேன்.
கட்டிலுக்கடியில் குஸ்தி யிட்டேன்.
'மாடோட்டினேன்; மணல் வீடாக்கினேன்...'
குழந்தை வளர்ந்து விடத் திரும்பவும்
கிழவனாகினேன்.

## என் வழியே

தனியனாய் உணரும் தருணங்கள் உண்டென்றேன்,
இணையிருந்தால் இராதென்றார்.
துணையுண்டென்று சொன்னேன்.
மணந்தாயிற்றா என்றார்.
'உள்நானைக்' சொன்னேன் என
பிரிந்தாயோ உறவை எனப் பரிகசித்தார்.
உரைக்க பதிலுண்டு. இருக்கும் கேள்விகளும்...
சன்னமாய் சிரித்து முன்னேறினேன்!

RangaRakes
tamilnavarasam.com

## மண்ணில் தெரியுது வானம்!

நானும் நினைத்திருந்தேன்-
நிலம் நோக்காத் தலையனாய்
நேர்ப்பார்வையாய் நடப்பதே நேரியதென்று...
நடந்து நடந்து கழுத்து விறைத்துக்
குடைந்தது!
நேர்ப்பார்வையாய் தார்ப்பாதை தூரத்தே...
தரைநோக்கினும் அதே பாதை அருகே!
கண்களும், உதடுகளும்
கன்னங்களும், பற்களும், நுதலுமாய்
விழிகளில் நுழையும்...
நழுவும் இதயங்கள்.
நேர்ப்படுவதும் முழுமையற்றதாய்...
பார்வையை மண் சேர்த்தேன்.
விரைத்த கழுத்து வலி குறைந்தது!
தரை யுறவு வரவாகியது!
இறைந்திருந்த எண்ணங்களை இருகை கொள்ளாமல்
பொறுக்கி யெடுத்தபடி விரையத் தெரிந்தது!



## குட்டிராஜன் கழுதைப் பயணம்

### 1

குட்டிராஜனைக் கட்டிப் போட்டிருந்தது காலம் கழுதை
யோடு.
கழுதையிலும் கழுதை, கழுதை; கழுகழுதை, கக்கழுதை.
குட்டிராஜன் கானம் பாட குவலயம் மும்மாரி பெறும்.
குளிரும் வாய்க்கால் வரப்பு நஞ்சை புஞ்சை நான் நீயும்.
சொக்கிநிற்கும் ஊர்குழுமி; உறவு கொண்டாடி.
ஊளையிடும் உடன் கழுதை சுண்டலுக்குச் சுண்டெலியாகும்.
அன்புமிக மண்பரவி வணங்கித் தொழுவார்கள்.
எட்டியுதைக்கும் கழுதை கபாலங் கழல.
ஆனமட்டும் நீரிறைத்தா னதன் கவசகுண்டலங் கழற்ற
அந்தோ கையழிய குட்டிராஜன் விழலுக்கு.
மறுகு மனம் மறுக
இறுகப் பிடித்திருக்கும் விலங்கு.
பரவும் பாதையெலாமிரு மருங்கும் பூக்காடு.
மயிரிழைக் கயிறொன்று மின்னரவா யுறுத்த
இருந்தவாறிருந்தா னிருநூறு வருடமும் மேலும்.
கருணையா? கழுதைக்காலடி பழகிப் போனதா?
வெருட்டியதோ வழியோடிய பாம்பு புலி நரி பலவும்...?
பெரிதல்லோ அறிந்ததற்கு அறியாத்த பைசாசம்...?

### 2

திடுமெனக் கூடிய ஜனனமாய்
தடம் மறைத்தொரு தினம் தப்பி விட்டான் குட்டிராஜன்.
இடம் பிடித்திருக்கக் கூடும் அடர்விண்மீன்களிடை.
பெயர்ந்தன பறவைகளும்.

RangaRakes
tamilnavarasam.com

''ஏன் காணோம் எவரையுமே? எதிரொலி நான் ராஜனது.
ஏன் காணோம் எவரையுமே?''
அரற்றியது அற்றகுளம்.
பறந்ததுவூர் பின்னங்கால் பிடரிபட.
''வாரும் எல்லோரும், வாரிசு நானே!
பாருங்கள் நன்றாய், பளீர்வைரமகுடமிதோ!''
காற்றால் வேய்ந்தது கிரீடம். கழுதைக்குத் தெரியாது
பாவம்!
கடனொளிக் கறையம்புலி. கவியும் இருள்
கதிரிறக்க.
பதறிப் போயின ரெல்லாம் அப்பாலுக் கப்பாலே.
எட்டி யுதைக்கப் பொட்டில்லை. ஏங்கின கால்நான்கும்
குட்டிராஜன் கையெழுத்தில் மனுவரைந்தது மக்களுக்கு.
வரியெல்லாம் விரவிய மிருகவாடை....
வரலாகுமோ ஒருவரும் அருகே?
பரியாவதே வெண்காக்கைப் பாலாக
நரனாகுமோ கழுதை? கழுதையினும்
கழுதை கழுகழுதை கக்கழுதை...



# சூரிய நமஸ்காரம்

**நை**ந்த கறுப்புப்பொம்மையாய் கிடந்தது அது—
கழிவுக ளோடே
சாலையோரம் ஒரு சோகநாடகமாய்.
தெறித்தது எண்ணெய்க் கொப்பரை.
ஆக்டேவியா கணவன் கண்ணீரும்.
இதற்கு ஆறுமணி நேரம் கழித்து
நேற்று எங்கள் ஆற்றில் நெரடியது
பங்காளி போல்.
தெரு இருளின் அணுவாய் முன்னால்
உருண்டெழுந்து நகர்ந்து கொண்டிருந்தது.
பீ மிதிக்காமல், வட்டக்கால் எருதுகள்
முதுகு பிளக்காமல், போர்த்திய திகம்பரராய்
கயிற்றரவின் மறுமுனையை எட்டும் வேளை
அம்மா சொன்னாள் அரைச்சிரிப்போடு:
''அது அவ்வளவுதான்.''
அவ்வளவு தான். கதவருகே கையுள்ளே
குவிந்தது. 'அவ்வளவு தான்.'

RangaRakes

tamilnavarasam.com

## விழல்

அந்த என் வரிகளெல்லாம்
அந்தந்த நேரத்து மெய்த்துளிகள்.
அள்ளிச் சேர்த்தால் கடல்பெருகும்.
காலத்திற்கும் முத்துக் குளிக்கலாம்.
நீயோ-
லோட்டாக்களில் கூறுபடுத்திக் கடைவிரித்தாய்.
பட்டுப்பூச்சியைக் காட்டிச் சிரிக்கும்
பிள்ளைப் பரவசமாய்
கொள்ள முடியாதபடிக்குக்
கூவும் உன் பலசரக்குக் குரல்...
குடித்தவர்கள் கரிக்கிறதெனக் கூறிச்
சென்றிருப்பார்களாயிருக்கும்...
அன்பை பூதங்காக்க ஆன்ம பலம் வேண்டும்.
அம்மணமாக்கித் திரிய விட்ட உன்
நீர்மை
மலையேற்ற முடிவில் காலிழந்ததாய்...



## அந்தரங்கம்

வத்திகள் வேண்டாம், வியர்வை நாற்றமெடுக்கும்.
மலர்தூவ லாகாது, ரணபூமி நினைவுறுத்தும்.
யாரையோ காட்டும் ஆடி தேவையில்லை.
அகற்றியாகி விட்டது சுவரில் மாட்டியிருக்கும்
மரணத்தின் சிரிப்புகளையும்.
காலப் பாழுக்குள் வீழ்த்தி கண்ணழிக்கும்
கடிகாரம் காணாமல் போகட்டும்.
அழுத்தமாக மூடிய ஜன்னல்களும்,
கதவங்களும் கூடிய
அத்துவானக் காட்டில் தான் நம் கடிமணம்.
நேற்றும் நாளையுமற்று நான், நீ மட்டும் இங்கு...
இதில் எங்கிருந்து ஊடுருவின
கத்திமுனைக் கீறல்களா யிக் கண்கள்?
எங்கிருந்து கமழ்ந்து என்னைக் கூச வைக்கிறது
நாற்சந்திவாசம்?
நீ நாலாறு பேரானதெவ் விதம்?

RangaRakes
tamilnavarasam.com

## புயல்கரையொதுங்கியபோது

கவசகுண்டலமழிந்த அந்த காய்ச்சல் நாட்களில்
புகலறியா வியூகம் சிக்கி
கதிர்வீச்சுகள் சுக்குநூறாக்கிய
நிராயுதனாய்
அம்புப்படுகையின் மேல் அழுதிருந்த பொழுது
போய்
இன்று மழையோய்ந்த மௌனத்தில்
நோய்மீண்ட உடல்.
கைதோளுக்கிடை கடல்வெளி.
நடப்பது மிதப்பதாக
வடிவழிந் தேக
என் நிழலே போல் வளைய வரும் நான்.
மெல்ல வடியும் மரணபயம்.
என்றாலும்
படுத்தே கழிந்த பத்து நாள் 'பரோல்'
போக வேண்டிய சிறை
களிச்சோறன்ன பிற
இடியறையும்
மண்டைச்சூடு மாத்திரம் மாறாமலே.



## பதிவு

மேலே போயாக வேண்டும்.
பின்னோடு வந்ததை கைகருக எடுத்துக்
கிடத்தினே னொரு ஓரமாய்.
நாளடைவில் அதன்மேல் அப்பிக் கொண்டது
புழுதிப்படலம்.
தட்டுமுட்டு சாமான்கள் அடுக்கப்பட்டன.
ஊசிமுனை துளைக்க உயிர்கசியும் வேளைகள்
மழுங்கின.
தடுக்கி விழும் பயமின்றி நடைபழகிற்று.
சுவடழிந்ததாய் சுற்றிலும் ஒரு சாந்தி...
சமயங்களில் துழாவிப் பார்க்கப் புகும்
கரங்களில் திணிப்பேன்
சோற்று மூட்டையை.
இன்று இருந்தாற்போலிருந்து வீசிய
ஊழிக் காற்றில்
புழுதிபறக்க, பொருளுருண்டு சிதற,
ஆழத்தில் கண்திறந்தது
சீழ்பிடித்த கபாலம்.

RangaRakes
tamilnavarasam.com

## அச்சும் பண்டமும்

சிந்துபாத் பயணம்
ஆக்டோபஸ் முதுகில்.
ஆயிரங் கால்கள்
வருடுவதா யறைந்தபடி.
உயிருருகும்.
பலமனைத்தும் திரட்டி
சில கால் பிரித்தெடுக்க
இறுக்கும் பிறசில.
அடி முதல் முடி வரை
படர் சாட்டை வரி
வடுவாயும், கசிந்த
படியும்...
சிரசில் பதிந்தொரு கால்
நிரந்தரமாய்.
கண் தின்னும் மண்.
சூரிய சந்திரன்
சதுரமா செவ்வகமா?
சரியாகாது
நாணலாகி விட்டதென்று
முதுகெலும்பைச் சொல்லுவதும்.
ஆற்றுப் போக்கில்
ஆங்காங்குறும்
சுமைதாங்கிகளில் சற்றே
சாய்ந்து
சிரம பரிகாரம் செய்யப் போக
தாங்கிக் கல் தாவி
முதுகேறியது.
ஆக்டோபஸின் மேல்
ஆக்டோபஸ்...
மேலின் மேலின் மேலின்...



## மொழித்துவம்

நீலம் சிகப்பு மஞ்சள்
பச்சை
கருப்பு வெளுப்பு மா பூ பலா
கண் மருந்து பால் ஈ புறா
அது இது எது எது
தினம் கணம் நிரந்தரம்
மரணம்
ஜனனம் புனரபி
ஸாம்ஸன் தலைமுடி
தகர்தூணுறு(ரு) வரு(று)
தேவ தரிசனம்!
தண்தீச்சுட ரொளிர்
தேஜோமயம்!
நிர்விசாரம் பெருகும்
விரிவெளிக் கதவருகாய்
இருகைப்புலிரோஜா சிரித்திருக்க
காற்றுக் கடிகாரம் கூறும்
நாளை படித்தாயிற்றென!
நிலவூறி யினிக்கும் நா!
நதியெல்லாம் நெஞ்சுள்ளாய்!
நட்டதழிந்தோட ஓட
விட்ட இடம் விடியும்!
சிறுகாற் பெருவளத்தா னாட்சியில்
செக்குமாடுயர்த்திய சிறகெங்கும்
பட்டொளி வீசிப் பறக்கும் காட்சி
காணப் போதுமோ கண்கோடி?!

RangaRakes
tamilnavarasam.com

## மனவந்தனம்

பாதிக்கிணற்றின் மேல் அந்தராத்மா பேதலித்த நாழி
காலடி பதிந்த மரப் பாலமாய்
காலந்தப்பாது வந்தடைந்ததுன் வாழ்த்து மடல்!
சாகரங் கடந்த அகர இகரங்களில்
சஞ்சீவிப்புதர்கள் செழித்திருந்தன பக்கங்களில்.
எழுதிய, எழுத்துக் கோர்த்த ஏராளங் கூடு பாய்ந்து
காடு மலை கடல் கடந்து
வரியிடை வரி வலம்புரிக்காய் மீண்டும் மீண்டும்
முழுகி மூச்சுத்திணறி நீயலைந்த கதை யுரைக்கும்
மெய் யுயிரெழுத்துக்கள் மிக நிறைய.
கடந்து வந்த பகலிரவுகளில் அதிர்ந்துதிர்ந்தது
எண்ணிறந்தது போக
இன்னமும் கனிந்த சுடராய் கூட வரும் நீ.
இரண்டனுப்பி யென்னைப் புரந்த காருண்யம்
எண்ண எண்ண
மயிலிறகின் சுமையேறிய வண்ணம்.
அச்சிறும் போல்...
பாரந் தாங்கலாற்றாமல் பதில் மரியாதை செய்யப்
பதறும் மனது.
வேறென்ன தரலாகும் ஒரு கற்றுக்குட்டி கவிதை தவிர?
வருநாளுக் கெல்லாமாய் தருமிவ் வரிகள்
தரட்டும் வருடியுன் தேடித் திரிந்த
கண்களை, கரங்களை, கால்களை,
அறிவை, அன்பை,
அன்னபிறவை யெல்லாம்.

*('தேவி'க்கு)*



## பதிலாகும் கேள்விகள்

எங்கிருந்து பிராணவாயு இந்தக் கண்ணாடிக்
கூண்டுக்குள்
எனக் கேட்பவர்களுக்கு
எப்படித் தெரிய வைப்பது
வானம் நாற்புறமுமான திறந்தவெளி அரங்கிது
என்பதை?
அதிரும் செவிப்பறைகள் வேறாக
உள்மரச் சலசலப்புகளை உணர்த்துவ தெவ்வாறு?
மாறும் தாகத்து மனிதர்களுக்கு
என் நதிநீர் கானலாகக் காண்பதில்
என்ன வியப்பு?
தனிமைச்சிறைத் தாழ்வாரங்களாய் தட்டுப்படுவது
உப்பரிகையிலிருந்து தாழப் பார்க்க
உன்னத ராஜா பவனி வரும் உற்சவச் சாலையாக
தெளிவதென் றுமக்கு?
நான் நீயாக, நீ நானாக
நிர்ப்பந்தம் யார் ஆக்கியது?
நியமங்கள் ஒன்றாய் ஏன்
நிறம் பலவாயிருக்க...?

RangaRakes
tamilnavarasam.com

## ஆகுதி

மனதின் ஒளிப்பாய்ச்சலுக்கு முன்
முட்டி போட்டு நடக்கும் உடல்
ஓடான மாடாக நுரைதள்ள
உட்பரவும் காட்டுத்தீயில்
வெளியெல்லாம் வெளிச்சக்காளியாக்கி
வியப்பும் பயமும் வார்க்கும்
ஓங்கி உலகளந்த ஜ்வாலையாய்
விரிதலையாடச் சிரித்தது அந்த வரி:
'தீக்குள் விரல் வைக்கும் சிரமம் தரலாகா தென்றா
எனக்குள் தீயை வைத்தாய் நந்தலாலா?!'
வரித்துச் சேர்த்தணைக்கும் பெருவிருப்பு
நெருப்பைப் படரும் நெருப்பாய்...
ஆள்விழுங்கப் பார்க்கும் அடர்வெப்பம்.
சுவர் சித்திர படிமம் துரத்த
தூரம் போகிறேன்
உருக்குலையாமல் உலை புகுந்து மீளும்
தருணம் பார்த்தவாறு.



## சுவர்க்கோழி

தினமும் பேசுகிறது, தூரதேசத்து
சங்கேத பாஷையாய்.
பரவும் பயம், போதம் பப்பாதி.
நெற்றிச்சுருக்கம், கண்ஜாடை,
கண்டத்தந்தியதிர்வென
முனை கிடைக்கலாம் முகங்காட்டினா லாவது.
மறைவிடமே தெரியவில்லை.
நூறாயிரந் தூண்களுக்க்காய் ஓடியோடிக்
கரையுங் கால்.
ஒரு பொருட் பன்மொழி-
இரட்டுற மொழிதல்-
முரண்தொடை, உருவகம்-
இலக்கண மென்ன இவ்வுரைக்கு?
கூக்குரல், கிசுகிசுப்பு, கேவல்,
கானமழை-
இயல்பென்ன இந்த த்வனிக்கு?
கண்கட்டியிருக்கும் கறுப்புப்பட்டைக் கப்பால்
கலங்கித் திரியும் காட்சி
காற்றுச்சாயை நீட்சியாய்.
பிளக்கக் கிட்டுவது சிமெட்டி, செங்கல்
முடிச்சிட்ட நாளச்சிக்கு-
சுண்ணாம்பும், செந்நீரும்-
நிணக்குழம்பு மட்டும்...
வீடெங்கும் வியாபித்திருக்கிறது ரீங்காரம்.
மௌனவேளைகளில் கரைமீறும்
பிரவாகப்பேரிரைச் சலாய்.
அடர்காட்டின் எக்கிளையில் அடிமுடியாய்
ஆடும் யார் வருவாரோ
உதவிக்கு...?

RangaRakes
tamilnavarasam.com

## வரைபடம்

காலுங் கையும் சூம்பிப் போனதாய்
ஏதோ ஒன்று காணக் கிடைத்தாலும்
அழித்து விடலாம் அரைகுறை நிறைவோடு...
கண்டதெல்லாம் விண்ட புள்ளிகளும்
வரித்துகளுமாகையில்
கலைப்பதெங்ஙனம்...?
குரல்வளை நெரிக்கிறது கூவுங்காலம்.
'கருவா என்ன? கலைத்து விடு.'
அறிவுறுத்துகிறது.
விரலுரியத் தேய்த்து விரட்டினாலும் போதாது.
பழக வேண்டும் பின்
விழி வயது மூன்றின்-
இழுகோடு இரண்டெட்டிருப்பதாக...
விழுபுள்ளி குரங்கு புலி கிளி கரடியாக...



## அக்களோ - பட்சி

அளவு குந்துமணியோ, கோலிகுண்டோ-
குரல்வளைப்புறத் தொரு துளையிருக்க
காடுமலை மேடெல்லாம்
கண்ணெல்லாம் தொண்டையாகக் கரைந்து
திரிந்திருக்கும்.
திறப்படைக்கக் கரம் காலாக்கிப்
புரிந்திருக்கும் த்வந்தயுத்தம்.
வெளிப்போந்திருக்கும் நீர்
விரலிடுக்காய்.
அனல்தகிப்பில் ஆவியாக நீரை
வாங்கிக் கொள்ளப் பார்த்து
வானெழும்பியிருக்கும்.
நாநுனியோடே நீர்க்கனிவு
கண்தந்து பறிப்பதாய்.
அகழிதாண்ட லாகாது அலைபாய்ந்
திருக்கும் அங்கும்...
எங்கெலாம் தலைமோதி மூக்குராய்ந்து
அழுததுவோ யாரறிவார்?
என்னென்ன சொல்லி அரற்றியிருக்கும்...
எத்தனையாவது டார்ஜானாவது
அறிந்திருக்கக் கூடும்.
போன நேரங்களில் ஈனக் குரலெழுப்பவும்
திராணியற்று
இறந்த சிறகுகளோடு சுருண்டிருக்கும்
ஓர் மூலையில்.
சும்மாயிருந்திருப்பானா சர்வாதிகாரி?
சிறுகல் சிறுவ னெறிய பெரியவன்

RangaRakes
tamilnavarasam.com

பொரித்துத் தின்றிருப்பான்.
ஒரு கையேனும் புனல் நுழைத்துப்
பயிர்தழைக்கப் பாய்ச்சியிருக் கலாம்...
வெருளாம லிருக்குமோ பறவையும்?
'யாருக்கோ நீர்தராத் தண்டனை
யாரோ அனுபவிக்கிறான்'
- அழுகுழந்தையை அடக்க
ஆயுதம் வீசுவாள் அம்மா.
சிறகுவரம் சிறையிலும்!
பறந்தது வானிலோ, நானிலோ...
'அழிந்து விட்ட இனம்' என்பார்கள்...
விழுந்து கிடக்கிறது வழியெங்கும்.



## 'ஒரு மனநோய் மருத்துவச்சி'க்கு...

'அன்பிற்குரிய காதரீன் அவர்களுக்கு...'
அல்ல, அப்பட்டப் பொய் எதற்கு? ஒரு
விரல் சொடுக்கில் என்னைக் கிறுக்காக்கியவளை
'சிறுக்கி' என்று அழைப்பது தான் சரி.
'அடி சிறுக்கி காதரீன்...'
சற்றே முரண்பட்ட ஒரு கணத்தில் உனக்கு
மறை கழண்டவளாகி விட்டேன் நான்.
அரசியல் தெரியுமா - மனதின், மதத்தின்,
மனநோயின்...
உரைப்பாயோ, உன் பட்டம் கிட்டியதெவ்வாறு?
அப்படியிப்படி எத்தனை தப்படி? கூறு.
நாவறுந்து போகுமோ நதிமூலம் கேட்டால்?
உன் நிலையடுக்குகளிலெல்லாம் என்னென்ன
எலும்புக் கூடுகள்?
வெலவெலத்துப் போவாய் விரல்விட ஆரம்பித்தால்.
குடும்பமென்றால் நாலும் இருக்கும். ஆம்-
வீட்டுக்கு வீடு வாசற்படி. ஆனால்
வீடுகளும் படிகளும் வெவ்வேறடி...
கோடுகளோ கோடி... வானம்பாடிகளுக்கும்
தன்னையே முன்னுதாரணமாக்கும் உன்
புன்மையை என்னென்பது? போடீ!
'என்பதும் ஒன்பதும்+' படித்ததுண்டா?
கண்பதித்ததுண்டா கலைடாஸ்கோப்புக்குள்?
என்ன கண்டாய்?
கண்டவர் விண்டிலர். காணாதார்...?

RangaRakes
tamilnavarasam.com

தேர்க்காலில் உன்னை இட்டுக் கொள்ளாவிடினும்
ஆறமர்ந்து அசை போடு.
சிறிதேனும் வருத்தப்படு - உன்
சிரசெங்கும் துருத்திக் கொண்டிருக்கும்
கொம்புகளுக்காய்.
சீவப்பட்ட அவற்றின் நச்சு முனைக்கூர் உனக்குள்
ஆற இறங்கிப் படர்ந்து கொண்டிருக்கிறது.
'நீலம்' பாரித்துப் போகும் போதாவது நினைத்துப் பார்.
'நீயும் பொம்மை, நானும் பொம்மை
நினைத்துப் பார்த்தால் எல்லாம் பொம்மை'.



## முட்டாள்பெட்டியின் மடியில்...

'ஒரு வாய் நிறைய வான'த்தில் பிறக்கிறது அசரீரி;
"பழி தீர்ப்பானா, மாட்டானா அபிமன்யூ?"
அழும் மழலையின் அனாதரவு அடிமனம்
பழுக்கக் காய்ச்சிய கம்பியாய் பாய
தாயிடம் பீறிடுங் கண்ணீர் திரை மீறும்.
தீர்ந்து கிடந்த அடிமகள் உதிரம்
யாரையும் உறுத்தாதது அகம் வருத்தும் அதிகம்.
ஆணவத் தந்தையின் தானறு நிலை
ஆனந்த மளிக்கவில்லை.
மீண்டும் உரத்துக் கிளம்புகிறது குரல்:
'பழி தீர்த்துக் கொள்வானா அபிமன்யூ?
முந்திச் சொல்வோர்க்கு முன்னூறு பரிசுகள்'
இரவு பகல் இருபது நாட்கள்
களித்திருக்கலாம் 'கோவாக் கடற்கரையில்'
விதிமுறைகளை எடுத்துரைக்கும்
இரவல் குரல் இரையக் கிளரும்
துளி சபலம்.
'வரவு செலவுக்குள் அடங்கும் யாவும்'
புரியும் வரியிடை வரிகள்.
இடைமறிக்கும் கேள்விகள் இருந்தும்:
'இந்தக் கணங்கள் தருவது எந்த
சந்தையிலிருக்கும்?'
'இன்னும் கேவிக் கொண்டிருக்கும் பிள்ளைக் குரல்
நிழலா? நிஜமா?'
ஜம் ஜம் குதிரை, ஜாராட்டு குதிரை...
'காட்சியின் நிஜமெல்லாம் கமர்ஷியல்' வரை...

RangaRakes
tamilnavarasam.com

## எண்ணின் பின்னங்கள்

உருகியுருகி அஞ்சலி செய்யும்
குரலருவிக்குள்
கூடு விட்டுக் கூடு பாய்கிறது மனம்.
செதுக்கப்பட வேண்டியது இக்கணம்.
விதிக்கப்பட்ட உளி வரிகளாக-
மறுகும் உள்.
திரும்பத் திரும்ப வரைந்தென்ன?
அரைவட்டங்களே நிறைகின்றன.
பருகும் உதடுகளுக்கும், பழக்கோப்பைக்குமான
இடைத்தூரம் ஏழு கடல் மலையாக,
வாதப் பிரதிவாதங்களுக்குள் அடங்கா
வழக்காழம் மொழிநழுவிப் போக,
விட்டு விலகியவாறிருக்கும் வட்ட
முழுமை, யதன்
உட்புள்ளி, வெளிச்சுற்று
பரப்பெல்லை, ஆரம், வட்டம், வடிவம்,
நிறம்-
வேறெதும் ஒரு போதும்
உள்ளது உள்ளபடி சொல்ல வல்லாமல்
களைத்துச் சோரும்
கை வடித்திருக்கும்
காலந் தோறும்.



## உயிர்க் கொத்திகளுக்கு ஒரு பாடல்

உற்ற குளத்தில் வந்திறங்கின
உறவு கொண்டாடி.
சிறகு மடிப்புகளிலெல்லாம் நெருஞ்சி முட்கள்.
முறுமூக்குகள் குட்டை குழப்பிச் சேறாக்கின.
நாறும் வாய் நாராசமாய் கூவியவாறு.
அடிக்கொரு தரம் பளிங்குநீரில் எச்சமிட்டன.
பிடியடங்காப் பெருவெள்ளம் கீறிக் களித்தன.
இடவலமாய்ப் பறந்துயர்ந்து, உமி தேடித்
திரிந்தலைந்து
விரும்பிய நேரமெலாம் 'விர்'ரென்று இறங்கி வந்து
மடி பிடுங்கின.
ஆற அமர வான் பார்க்க வழியில்லை.
நீரமைதி நிலைகுலைந்து போனது.
பேரலையாய்ச் சீறலாகாக் குளம்
பொறுமை காத்திருந்தது.
வரும் நாளிலொரு நாள் தலைதெறிக்கத்
தன்னை சுருட்டியெடுத்தோடுமோ?
அன்றி, நிலை மாறிப் பிரளயமாகி
நிர்மூலமாக்குமோ?

RangaRakes tamilnavarasam.com

## குருவியும், காபூலிவாலாவும்

வளர வளர வெட்டுப்படும்
சிட்டுக்குருவியின் சிறகுகள்.
கால்கட்டிப் பறக்க விட்டுச்
சுண்டியிழுக்கும் காலம்.
இனி காற்றின் கதை கேட்க
வரமாட்டான் குட்டித்தோழன்.
வரவர குறுங்கொம்பும், வாயுலகும்,
வாலும் விடைபெறும்.
நாலிரண்டில் தரை தட்டும் நடை.
பழகவேண்டும் தோள்சுமை.
''விளையாட்டில் எல்லாம்தான் உண்டு!''
எளிதாகப் பகர்ந்தார் நகர்ந்தார்.
தெளிந்தும் களைத்திருக்கும் அகம்.
கன்னிப்பெண்ணுக்குச் சின்ன பொம்மை
கொண்டு தரும் அன்பு
கையறுபடும்.
வில்லடியும் கல்லடியுமான வாழ்வில்
சொல்ல வல்லாமல்
இட்ட கோட்டின் இப்புறமாய் சில
காபூலிவாலாக்கள்.



## இரை விழுங்கித் திரை

உறுவாழ்க்கை வரமாக 'ஆர்யா' பல்பு வேண்டும்.
பருவப்பெண்ணைத் துரத்தாதவன் பாதி ஆண்.
புலியைப் புள்ளிமானாக்கும் 'கான் கஸந்த்'
கலிதீரும் - கபில்தேவ் 'டேஸ்ட்' சுவைக்கவும்.
நாலெட்டு 'ஐந்து நட்சத்திரங்க'ளைப் பறித்து
வாயிலிட்டுக் கொள்ளாப் பிள்ளை வெத்துக் குப்பை.
நாலெட்டு கால்தேயாமல் நடக்க வேண்டும்-
நானூற்றுப் பதினெட்டு ரூபாய் செருப்பு. விருப்பு
வெறுப்புக்கு 'வெனிலா' எண்ணெய் பொறுப்பு.
பரு வராமல் காப்பதே பிறவிப் பெறும் பேறு.
பூசு ப்ளியரஸில், வேறு-
காசநோய் போக்கும் பாரு
நேசமிக்க 'ஜிப்ஸி ஸோலா' - லாலல்லல்லல்லல்லா....
பரிட்சையில் தேற, பெரிய வேலை சேர தேவை
வைட்டமின் ஆயிரங் கொண்ட 'வாலிக்ஸ்' சேவை.
பெரியவரோ, சிறியவரோ - துருப்பிடிக்கும் மூளை
'பார்ன்மிட்டா' அருந்தாவிடில் நாளை.
நோகும் இடுப்புக்கு உண்டு நூறு தைலம்.
போக வரக் கிடைக்கும் அடுப்புக்கரித் துண்டு இனாம்.
சுகப்பிரசவமாகும் - ஸின் சோப்பில் தோய்த்தால்.
'செஸ்டஸே' காப்பியில் ஸப்தஸ்வரம் சங்கமம்.
'தாய்' எஸ்டேட் தேனீர் பருக
மாய்ந்து போகும் மரணமும்.
இல்லறத்தின் சாரம் 'இளவரசி' யணியலங்காரம்.
அமரன் பட்டணிய அழியாப்புகழ் சேரும்.
கலங்கரை விளக்கமாகக் கண்மின்ன உண்பீர்
'பொன்' மிளகாய்ப்பொடியும், மசாலாப்பொடியும்.
பட்டிதொட்டியெங்கும் பறக்க உதவும்
'குட்டியானை' பபுள்கம்.

RangaRakes tamilnavarasam.com

வாய்நாற்றம் அகல, விட்டு விலகும் நட்டமெல்லாம்.
வாங்குவீர் திக்கெட்டும் பரவிய கிருமிநாசினி புட்டி.
ஒரு நாளைக்குப் போதும் ஒன்று மட்டும். இள,
முதுநரை போக்கும் முடிச்சாயம் கொட்டித் தடவ
மறையும் முன்ஜென்மக் கறை பல.
மூவாயிரம் ஷாம்ப்பூக்களில் முக்காலமும் பிடிபடும்.
பகைதீரப் படியுங்கள் 'பேபியின் மடியில்'.
பகுத்தறிவைப் பெருக்கிக் கொள்ளச் சுற்றுவீர்
அதிர்ஷ்டச்சக்கரம்.
கதிமோட்சம் உஜாஜ், பஜாலா கைவசம்.
சுட்டுப் பொசுக்கும் வெயில் மசிய
எட்டு பாட்டில் 'ஜிஸ்னா குடித்து
கட்டிப் புரள வேண்டும், பேதி முட்ட
நட்ட நடுநிசியில்; நடு வீதியில்.
கற்க வேண்டும் கசடற-
கலா கலா குலுக்கலா...
விலாவரியாய்த் துலங்கும் தொப்புள் கொப்புளங்களில்
விழியப்பிக் கொள்ளட்டும்.
எந்தக் குழி சுந்தரச் சுழி?
எழுதியனுப்புங்கள் இக்கணமே-
எக்கச்சக்கமாய் பம்பர் பரிசுகளுண்டு:
உரல் முதல் விரல் வரை...
- அரைகுறை வாழ்விதில்
இருள் பிரிந்தது முதல்
விரிவிரிந்த கண்களும் 'வினோபால்' வெண்சிரிப்புமாய்
அரும்பெரும் அனர்த்தமாகும் ஒளியும் ஒலியும்.
தினம் அழுக்கூறி ஊறி ஊறி, ஐயோ,
மனம் வெளுக்க வழியில்லையே எங்கள் முத்துமாரி.



## ரயில் ஸ்நேகம்

இடியின் முதுகில் என்னை எடுத்துச் செல்கிறது.
சிலநேரம் சிங்கத்தின் உறுமற்சிறகுகளில்.
சமயங்களில் சாதுப்பாம்பாய், செல்லப்பூனையாயும்
சப்தமின்றி சீராட்டுகிறது.
ஜன்னல் கம்பிகளில் கண்பதித்துப் பார்க்க
என்னை ஒரு மையப்புள்ளியாக்கிப்
பின்னுகிறது ஆரக்கால்.
கால் அரையாகும் வேகம் காண
வட்டம் முழுமையாய்
நான் இருந்தவிடமே திரும்பி விடுவேனாய்த்
தெரிகிறது.
திடுமென ராட்ஷஸன் கோட்டை மேல்
தடதடக்கிறது.
செவி நடுங்கும் அதிர்வில் கண்ட நேரம்
கொப்பளித்துப் பெருகுகிறது ஆறு-
வரண்டு வெடித்த படுகையிருந்து.
இலைகளே மலர்களாய் பூத்துக் குலுங்கும் திறம்
கலைநூதனம்; கண்மருந்து.
நுண்பச்சை நிறமாயிரம்; நூறாயிரம்.
காமிராக் கை மீறிய காற்றுப் பிரவாகம்.
'ஸாரதாஸை' எள்ளிச் சிரித்த மனதில்
பிரமிப்பூட்டுகிறான் 'அயர்ண்ராண்ட்' மனிதன்!
கையெட்டாத் தொலைவில் உதிர்கனவாய்
பறந்து சென்றது
பாப்பா மயில்போல் ஒன்று.

RangaRakes
tamilnavarasam.com

ஒவ்வொரு காட்சி வழியும் மின்னி மறைகின்றன
ஒளிந்திருக்கும் நட்சத்திர அட்சரங்கள்.
வாசிக்கப் புகின் விடுபடுகிறது காட்சி.
பார்க்கவே போதற்ற போது
வேர் கிளைகளுக்குள் போய் வருவதேது?
நிறையும் மனமெல்லாம் விரைவிரைச்சல் பிற
புரையேறித் தரும் போதம்!
கரையெல்லாம் இருமருங்கும் கையசைப்புகளாகும்!
ஏழுகடல் ஏழு மலை தாண்டி
ஏகியபடி என் ரயில்-
பயணத்தின் முடிவு பயணமாக.



## அரைவட்டங்கள்

வழிமறந்த குழந்தைகளாய் ஆனபோதும்
கற்களைக் கெந்தியும் காற்றுக்கு முகமேந்தியும்
மேற்பறக்கும் சிறகினந் தன்
நீள அகல நிறமாய்ந்தும்
தலைகீழ்க் கடலாய் வான் கண்டு
அலைநீந்தும் விண்மீன் காணப் புகுந்து
அங்கிங் கெனாதபடி
சூழலை ஆயபுலனனைத்தாலும் நீள
உள்ளிழுத்தபடி
நின்றும் திரும்பியும் நாசி சுருக்கியும்
கண்விரிந்தும் சென்றபடி யிருக்கின்றன
உள்செல் வழி சொல் நினைவு.
அள்ளிக் கொள்ளு முன் அகன்றேகி
துள்ளி ஒளிகிறது மரம் பல பின்-
கள்ளமாய் எனைப் பார்த்துக் கண்சிமிட்டியபடி.
ராதை யசோதை கண்ணன் குழலெனக்
குழம்பித் தளும்புகிறது மனம்
எங்கோ ஒரு பானையில் வெண்ணெய் குறைகிறது.
ஏதோ ஒரு நதிக்கரையில் துணியைக் காணவில்லை.
சர்வமும் நானே என சவடால்பேர்வழியாய்
வளர்ந்து விடலாகா தென் செல்லப்பிள்ளை...
காலாதி காலத்தில்
கண்கலங்கிப் பிரிவது காபூலிவாலாவுக்கு.
கைகொட்டித் திரிவது குழந்தைக்கு.

RangaRakes
tamilnavarasam.com

## காயலான் கடை

கல்லும் சிலையும் கணமொரு விலையும்
பூட்டும் சாவியும் ஸ்விட்சும் ஸ்பானரும்
சுத்தியலுமாய்
ஏதில்லை யிங்கு தான்?!
சட்டையும் வேட்டியும் ஈட்டியும் சாட்டையுமாய்
சூரியன்கீழ னைத்தும் உண்டு காண்!
பூட்டைப் பூட்டிக் காட்டப் பூட்டுகிறது;
திறக்கிறது. வாங்கிப் பூட்டத்
திறக்கிறது; பூட்டவில்லை; திறக்கவில்லை.
மார்பில் குத்தி முதுகில் வெளிவரும் ஈட்டிக்கூர்வலி.
தொட்டுத் தடவப் பெறும் உதிரத்துளி
உத்தரவாதம்.
அந்தரகாரத்தில் பதியும் கையிடமெல்லாம்
ஸ்விட்ச். அனாதிகால வெளிச்சம் கண்பறிக்கும்.
வாயில்களைத் தேடிச் செல்லும் திறவுகோல்கள்
கைகளைத் தவறவிடும். உருகலைத் திருகி
விடும் ஸ்பானர். ஆணியறைந்து
சாயுங் காலத்தை நிறுத்துப் பார்க்கும் சுத்தியல்.
நினைவில் கூர்மழுங்கியும் மழுங்காது மிருக்கும்
கத்தித் துரு காத்திருக்கும்
காயத்தைக் கீறவும், வடுவைத் திரும்பக்
கசியச் செய்யவும்.
தோள்களைப் பார்த்திருக்கும் சிறகுகளும், சிந்துபாத்
கிழவர்களும். சூட்சுமநாடிகளுக்காய்
சாட்டைகள், சட்டை, வேட்டி யுயிர்த்



திரைச்சீலையாய்...
சொப்பனப் பூக்களும், சொப்பு மாக்களும்
சொல்லக் கூடாதனவும், சொல்லி மாளாதனவும்
செய்யக் கிடைக்காதவையும், செய்து முடிக்காதவையும்
அள்ளியள்ளியள்ளி
எடுத்து நிறுத்து ஏற்றிக் குறைத்து
என்னை நானே கொண்டுங் கொடுத்தும்
ஏலத்தில் விட்டெடுத்த படி
பேரம் படியாமல் நேரம்
தறிகெட் டோடஓட
கடை மூடலாற்றாமல்
நாளுங் கூவும் சந்தைப் பாங்கு
நாவடங்காது மாதோ.

## காலம்

பாய்மரத்தை விரிக்குமுன் படகு நடுக்கடலில்...
துடுப்பிட்டேனா? நீர் கடந்தேனா? மீன் பிடித்தேனா?
தொடுவேனா மறுமுனையை?
அடைய முனையுண்டோ?
கடல் தொடரும் தடுமாறியபடி...

RangaRakes
tamilnavarasam.com

## பட்டகால்...

வட்டத்துக்குள் வட்டமாய் கட்டுப்பட்டு
வெட்டக் கடுக்குமோ வெனவிட்டுக் கெட்டு
வெட்டுப்பட்டு நட்டப்பட்டு
விட்டு விடுதலை நாடி எட்டியோடச்
சட்டெனப் பற்றும் மற்றொரு வட்டம்!

## நிலைமை

பாவம் என்று கொண்ட பாவம்
அந்தக் காகங்களும் அன்னம் வேண்டி
அதிகாரக் கூச்சலிடுகின்றன.
அரிசி தரவில்லையெனில் அலகால்
தலைகொத்திச் செல்கின்றன.
போகிறபோக்கில் பல்லிகளெல்லாம் தரையை
சுவராக்கிக் கொள்வதும் சாத்தியமாகிடலாம்.

## அச்சு

வலிக்க வலிக்க விடாமல்
படிப்படியே (ஏ)றி
உச்சி யெட்டிய கணம்
உச்சபட்ச ஆனந்தம்.
பின்-
இறங்கும் ஆயத்தம்



## படைப்பு

மரத்தில் மட்டுமா Bonzai?
பல்லி முதலையின்-
பூனை புலியின்-
குருவி பருந்தின்-
ஒரு வகையில்
குழந்தை, மனிதனின்...
மூர்த்தித்துவம்
கலையா? குரூரமா?

## இலக்கு

இதில் கவிதையில்லா விடினும் பரவாயில்லை.
இன்னும் சில வரிகள் கட்ட வேண்டும்-
இந்த இரவை நீட்டிக்க.
மரணமனைய உறக்கத்தை
சிறிதேனும் விரட்ட.
இன்னொரு பகலின் வரவை
சிந்நேரம் தள்ளிப் போட.
இன்றின் வட்டத்தை
இன்னும் துல்லியமாக்க.
இதுவும் கவிதையாகலாம்-
கவிதை வாழ்வெனில்.

## போக்கு

நூல் முனைத் தும்பியாய்...
பறக்கவிடும் பாவனையில் பிடி தளர்த்தி
சொடுக்கி யிழுத்துத் துயர் வளர்க்கும்
வேடிக்கை தொடர்ந்தபடி.
மறுமுனை தரையிழுக்காது மேலே பறக்கையிலும்
கயிறு நடுமுதுகில் கசையாய் எரித்தபடி.

RangaRakes
tamilnavarasam.com

## உள்ளளவும்

நேர்க்கோடாய், நெளிவளைந்தும்,
சிறுதுகளாய் விரையும் எறும்பு
இரைதேடி-
தரையழுந்தும் பாதங் கீழ்
குரலெழும்பாது பிரியுமுயிர் தாங்கி.

## மதி

செல் வழியெல்லாம் சேர்ந்து வருகிறாய்.
நீ நண்பனா? ஒற்றனா?

## பயணம்

பேரிரைச்சலாய் நீளும் தார்ச்சாலை-
மாவுமிஷின் பட்டையாய்.

## கோணம்

வானவூர்தி மீனாய்க் காண-
ஆகாயக்கடலின் அடிமட்டம் பூமியோ?



## இயல்பு

பூச்சொரியும் போதுகளில் முள்நினைக்கும் மனம்;
பேச்செரியும் பலநேரம் உள்கனக்கும் மௌனம்.

## சோகம்

அவன் வடித்தன யாவும் தொடர்ந்திருக்க
அவன் முடிந்து விட்டது.

## பாதை

நின்று நோக்க நீண்டிருக்கும்.
நடக்க நடக்கக் குறுகி முடியும்.

## இசை

குரலின் தனி உருவம் புலப்படும்
திருத்தலம்.

## சாத்தியப்பாடு

சோகத்திற்காய் சோகமாதல் சகஜம்.
சுகத்திற்காய் சுகமாதல்...?

RangaRakes
tamilnavarasam.com

## பிரக்ஞை

மழை நின்று நெடுநேரமாகியும்
குடை பிடித்தபடி...!

## வரலாறு

எப்பொழுதுமாய் அமைந்த வியூகங்கள்.
பகடைகள் உருண்டபடியே!

## பாரபட்சம்

முட்களை மட்டும் எண்ணிப் பார்க்கும் மனம்:
வாழ்வு நந்தவனம்!

## வள்ளன்மை

வையம் முழுவதும் அறிய வலது கை தரும்.
அன்பையும்.

## ஜனனம்

அடிமுடியில் பட ஓடியும் இடம்பெயராதிருக்கும்
தொடுவானம்.



## சேமிப்பு

சொல்லாது
உள்ளவை.

## சமூகம்

நால்வரெள்ளுவர் என்றான் - நாலிலொன்றாகி
நின்றான்.

## பின்னம்

நெய்தகாலை யானதா? நைந்து போனதா?
- இழை பிரிந்து விட்டது.

## வாழ்வு

இருந்தாற்போலிருந் தொரு சிரசுருண்டு போக...
பொருதலின்றியே ஒரு படைவீரன் சாக...

## இயக்கம்

உறவுப்பொதி சுமக்க இரவைப் பகலாக்கியபடி
நிற்கும் சிகப்பு வண்டி
பெருஞ்சாலை யோரம் இருப்பதில்லை யிப்போது.
காவல்நிலையம் உலாவரும் நாளிது.
பாலமமைக்கும் தொழிலில் நஷ்டம் தான்.
இருந்தும் மாடியேறி வர மட்டும்
மறப்பதில்லை மௌபைல் வண்டி!

RangaRakes
tamilnavarasam.com

## வேடதாரி

**தோ**லாகி விட்ட திரை விலகாத காட்சிகள்.
விளம்பரப் பாத்திர வெளிச்சம் கண்பறிக்கும்.
செவிடுகளாகும் தட்டாக் கைகள்.
விடிய விடியத் தெருக்கூத்து நடந்தபடி.
முடிவில் விருதுகள் முற்றுப் புள்ளியா?
மூன்றுப் புள்ளிகளா?

## மகிஷாசுரமர்த்தனம்

**ஆ**றிழுக்க, சேறழுத்த, இரண்டும் அறத்
திரியும் முடவ மனம்,
நிணத்திலிருந்து தெறிக்கும்
தலை யாயிரம்.

## நாயேன்

**யா**ரோ விரட்டியபடி, யாரையோ வெருட்டியபடி
ஆறோடியிருக்க வேண்டும்.
வாலைக் குழைக்க வேண்டும்.
விளக்குக் கம்பம் தேட வேண்டும்.
எக்கிப் பிடிக்க வேண்டும்.
நக்கிக் குடிக்க வேண்டும்.
கையைக் காலாக்க வேண்டும்.
கல்லெறிக் காளாக வேண்டும்...
குரைக்கத்தான் வேண்டுமெனத்
தரித்தேன்...



## பயணம்

**சு**ற்றமற்றவரின் சீரான ஸ்வாசவோசை சுற்றிலும்.
சுழலும் சக்கரங்களால் சாகரமாய் சப்தமிட்டுச்
சுருண்டோடும் சாலை.
எண்ணற்ற மரங்கள் கடுந்தவமியற்றுவதாய்
கண்ணயராது எனக்குக் கரமசைக்கக்
காத்து நின்றதுவாய்...
காற்சங்கிலியறுத்தென் பின்னோடி வருகின்றன!
ஓசைகளை மீறிய நிசப்தமும் பேசுகிறது!
ஓட்டுபவனை ஊடுருவும் மனம்.
ஊருறங்கத் தேரிழுக்கும் அனாதையாய்,
ஆண்டையாய், அழவைக்கிறான் என்னை!
பழகிய ஓசைகளும் தடங்களும்
படுத்துமோ அவனையும்...?
நேர்ப்பார்வையில் இறுதியின்றிப் பெருகும்
தார்ச்சாலை ஜனனமாய்...
கனத்த இருள் உறவாய், தனிமையாய்...
ஒரு கண விருப்பில் அந்நிய ஸ்பரிசம் பிரியமாய்
வருடும்.
இருவகையுணர்வில் விழி வரையும் கண்ணீர்.
அரிய, அறியாத நினைவுகள் அருகேகும்...
தூக்கம் இமைகளைக் கீழிறக்க
தருணமிதை இழக்கவியலா ஏக்கம்
தூக்கி நிறுத்த-
வழியும், பொழுதும், கழிந்தவாறு... கழிந்தவாறு...

RangaRakes tamilnavarasam.com

## இன்னொன்றுகள்

கேள்விக்குள் கேள்வி; பதிலுக்குள் பதில்.
சிதையேறி கனக்கும் மனித
சிநேகிதங்கள்.
தாள முடியாதெனத் தனியாகியும்
தனக்குள் இன்னொரு தானைக் கண்டு
திணறும் மனம்.

## ஓட்டம்

வாழ்வைப் பிடிக்கும் விழைவில்
வேகவேகமாய்ப் போகும் குதிரை...
வழியில் வேலி வர திகைத்து நிற்கும்.
தாண்டப் பார்க்கத் தைக்கும் முள்.
முன்னேறாவிடில் மனங் கிழியும்.
கனமிழுத்துத் தினவழித்துப்
புறத்தே செக்குமாடாகும்.
பரி உள்ளோடு விரையும்.



## எதிர்மறை

ஏச்சமயமேனும் நினைவெச்சமேதுமின்றி
நிச்சலனமாயிருக்க
இச்சித்து
இச்சித்து
அச்சமய சொச்ச நிச்சலனமும்
நச்சானதே மிச்சமாய்.

## சர்வம்

விழிக்கதவம் மூடிய பின் வழக்கமாய்
தீபாராதனை, உற்சவங்கள், கொட்டு முழங்க -
ஆண்டானடிமை,
காண் சோதியும், வேதமும்
பூணலங்காரங்களும்,
தூண், கூட மாடங்கள், 'யானை
ஆன பலவும்-
நானி லடங்க...!

RangaRakes
tamilnavarasam.com

## கூண்டு ராஜ்யம்

எப்பொழுது வெளியேறினேன், எதனால்-
எதுவொன்றும் நினைவில்லை.
கூண்டு ராஜ்யம் துறந்து பரதேசியான
சோகம் மட்டும்
ஈரம் மாறா அனலாய்...
தூரத்தே தெரியும் கூண்டில்
பேரரசனும் பிரஜையுமாய் போரின்றி வாழ்ந்திருந்தேன்.
தூரத்தே தெரியும் என் கூண்டு.
சேர வழியின்றி இடையோடும் வெளி.
முடிந்தாலும் கூண்டுக் கதவடைத்திருந்தால்...?
உடைத்துத் திறக்க உள்நுழைவார்கள் வழிப்போக்கர்கள்.
கூண்டற்ற கூண்டு வேண்டாதது.
கூண்டு நான் விட்ட இடத்திலேயே இருக்கிறதோ?
இல்லை, இடம்பெயர்ந்து விட்டதோ அதுவும்?
நானில்லாமல் தானியங்காக் கூண்டு அது.
பின்னோடு அருவமாய் வருவதாய்...
திரும்பிப் பார்க்கிறேன்.
விரும்பினால் இங்கொரு கூண்டமைத்தும் இருக்கலாம்.
கூண்டு வருவது பின்தொடர்ந்தா? தொற்றிக் கொண்டா?
உறுத்துப் பார்க்க, உறுப்புகள் மறைந்து
வரிவரியாய் இரும்புக் கம்பியிட்ட கூண்டு விரைவதாய்...



## தவளைக் கிணறு

கால்கடுத்தது தவளைக்கு.
கிணறு தான் எத்துணை பெரியது...
நீர் வேறு கீழிறங்கியபடி.
சுருக்கிட்ட குரல்வளையோடு நீர் பிளந்து முழுகும்
குவளைகளும் வாளிகளும் கூடிப் போயின.
கிணறு வாயை மூடும் கம்பிப் பின்னல்கள்
இருப்பதேயில்லை இப்பொழு தெல்லாம்.
மழுங்கிய முகங்களும் குரல்களும்
அடிக்கடி அகப்படுகிறது அண்ணாந்தால்.
சிரிப்பும் கைத்தட்டலுமாய் குறிபார்த்து எறியப்படும்
சிறுகூர் கற்களுமுண்டு.
நீருக்குள் நிச்சலனமாய் அலைய முடியவில்லை.
வாயகண்ட பாண்டங்களுள் வசப்படாது வெளியேறலே
வேண்டாத வேலையானது.
நீர் சுவருக்கு இடையுர்ந்த செடியமர்ந்தபடி தவளை.
கிணறும் தனதில்லையெனத் தெரிந்து போயிற்று.
வற்றிவிடலாம் முற்றுமாய் நீரொரு நாள்.
தூர்க்கப்பட்டு நினைவாகும் கிணறுகூட.
நிரம்பினாலும் வெளியேற்றமுண்டு.
திணறல் தான் தவளைக்கு...
எனில், மீனல்ல தவளை.

RangaRakes
tamilnavarasam.com

## மூவருக்குப் பத்தினியாய்

புருஷ னரச னாண்டி
புடைசூழப் பயணம்.
பொருள் தருவான் கணவன்
புரவலனுக்கு.
பெற்றுக் கொண்டு ராஜா
கற்றுக் கொடுப்பான் கவிதை.
இப்புறமப்புறம் இருவரு மிறுக்க
பின்னோடு வருவான் ஆண்டி
புன்முறுவலித்தபடி.

## நாற்புற முக்கோணம்

"பெயரைச் சொல்" என்றான்.
எதற்கும் பெயர் சொல்லி என்னாவது?
கணக்கில் தொலைந்து விடும் கண்சிமிட்டல்.
அன்பை ஆழாக்கில் அளக்கும் ஏழ்மை.
இந்த வறுமையையேனும் சொந்தமாக விரட்டலாம் தான்.
உரைக்கக் குறையும் உணர்வு.
நின்றான் நிற்கிறானில் நொண்டுங் கால்.
என்றாலும், வாயுப் பிள்ளையாரை பிடித்து வைக்கவேண்டும்.
உரு பெரிது. குரங்கானால் என்ன?
கடிவாளங்கள் தடுக்கத் தடுக்க குதிரைச் சவுக்கேந்தியவன்
பார்வை மூடிய புகைப்பற்று.
ஜாடிக்குள் பூதம் பூதமற்று.



## நாட்குறிப்பு

எத்தனை அட்டவணைகள்...
ஒவ்வொன்றிலும் அவ்வப்பொழுது
ஆயிரந் திருத்தங்கள்.

நாற்பத்தியைந்து நிமிடம்
அரைமணி யொரு மணியாகி
முதல் பாடம்
முடிவிலாகி
ஆசான்பெயர் வேறாகி
ஒரே புத்தகம்
ஒரு மண்டலத்திற்கென...

சமரசங்களும்
பிரயத்தனங்களும்
அட்டவணைக் கட்டங்களைக்கூடக்
கட்டிக் காக்கவில்லை.
அழித்துக் கொண்டோடும்
பரியின் வால்பிடித்ததில்
விழுந்தது மிச்சம்.
அட்டவணை கணக்கில்
அடங்காதது.

## படர்க்கை

வரிக்குதிரைத் தோல் விரித்த குறுஞ்செவ்வகப் பாதையில் தான்
இருமருங்கும் பார்த்தபடி மறுமுனை யெய்துவது.
முதல் பாதி தாண்டுகையில் வலப்புறமாயும்
மீதப் போதில் இடமேயும்
இருக்கத் தவறியதில்லை பார்வை.
விரியக் கிடக்கும் வெளியாய் ஆறு அமைதியாகு முன் அவசரப் பட்டதேயில்லை.
கை மட்டும் காக்கச் சொல்ல, அண்ணாந்து பார்த்திருக்கும்
யாரிடமோ கண்ணாய் அளவளாவியபடி காவல்காரர்.
என்றாலும், நிற்காமலிருந்ததில்லை 'நில்' 'செல்'லாகும் வரை.
கால்வீசி நடக்கும் பச்சைமனிதன் ஆசுவாசமாய் நிற்கும் வரை
அடுத்த அடி எடுத்ததில்லை.
முக்கால் மிருகக்காட்சி சாலையாகி விட்டதில்
வேகமேகும் விலங்கினங்கள் போக வழிவிட்டு
என்னைப் பாதுகாத்து வந்தேன்.
சாக்கடையும், சாணமும், பழத்தோலும், பிய்செருப்பும்
பாதிக் கிணற்றில் என்னைத் தள்ளி விடாமல்
பார்த்துப் பார்த்துத் தான் பாதை கடந்தேன்-
எண்ணங்களை எங்கோ பரண்மே லெறிந்து.
இருந்தும் ஒருநாள்
இடம்வலமாய் வந்த வண்டியொன்று
இடறிவிடப் பார்த்த தென்னை.



## தொடுவானம்

தினம் நூறு தடவையாவது விரல்களை சரிபார்த்துக் கொண்டான்.
ஒவ்வொன்றின் நீள அகலத்தையும்.
நகம் வளராமல் காத்துக் கொள்வதில் கவனமாக இருந் தான்.
உள்ளங்கை ரேகைகளைக் கூட.
கறையில்லை மச்சம் தானென்று உரைத்துப் பார்த்துக் கொண்டான்
மணிக்கட்டை.
சட்டை மாட்டும் போதும் கழட்டும் போதும்
அம்மைப் புள்ளியை அவசியம் கண்காணித்தான்.
மேற்கையும், முழங்கையும், மணிக்கட்டும், விரல், ரேகைகளும்
அதனதனிடமிருந் ததாவென அன்றாடங் கவனித்து வந்தான்.
நாளடைவில் முதுகு, முன், பின் னெல்லாம்
விரல்களாய்க் கிளைத்தன.
கனவிலுங் கண்டன.
யாருடையதோ.

RangaRakes
tamilnavarasam.com

## படிகள்

ஜதி பிசகும் மிதியடி.
அடுத்ததென்று அடுத்தடுத்துச் சென்று
ஒன்றரைப் படியில் நின்றழியும் நினைப்புக்குதிரை.
சாணஞ்சகதியுமாய் நழுவும் தரை.
வானமாய் விரல் மீறும் சுவர்.
வாழ்வைப் பிடிக்கும் ஜன்னித் துடிப்பில்
பின்னிருந்திடிக்கும் பல்லுடல்.
கண்மூடித் திறக்கக் கவியும் திரை.
தெறித்து விழும் பரப்பெங்கும் நரகல் நிறைந்திருக்க
சிரிப்பும் கரிசனமும் பெரிதும் வருத்த
பெருகா உதிரப் பெருக்கில் காலுக் கொன்றாய்
இருவரிசைப் படிகளில் ஏறும்போ தெல்லாம்
தீராதுருண்டபடி...

## முத்துமாரி

க்ளியோபாத்ராவின் கழுதைப்பாலாய் ரெக்ஸோனா;
ஹமாம்.
காயமொரு நாய்முகர ஆயிழை தீ மிதித்துத்
துண்டு விரித்துத் தாண்டும் லக்ஸ், சிந்தால்,
வாசனைத்தைலங்கள், பாண்ட்ஸ், குட்டிகுரா
இண்ட்டிமேட் வகையறாக்கள்,
பூ வகை, புத்துடை...
துர்நாற்றம் தாங்க முடியவில்லை.
துளையடைத்தல் படியவேண்டும் என்றேனும்.



## கால்நடைப்பயணம்

முள்குத்தும் காற்றும் முகமெத்தும் கதிர்வீச்சும்
கால்பறிக்கும் மாரியும் கண்தின்னும் ராவுமாய்
இயைபழிந்தி யற்கை இதம் வழங்காது.
இவ்வாறெல்லாம் கானல் போக்கனுக்கு.
ராகங்கெட்ட கச்சேரிக் கெல்லாம்
பக்கவாத்ய பொதி சுமந்து
எண்சாணும் நீலம் பாரிக்க
பயணம் கால்நடையாய் வண்ணான் வீட்டுக்கு.

## திருப்புமுனைகளும், கருப்பு மின்மினியும்

இங்கிருந்து தான் திரும்ப வேண்டும் எப்புறமோ.
எண்திசையும் கண்ணெட்டாத் தொலைவில்.
அப்பிய இருட்டில் அடுத்த அடியும் தடுக்கிடும் போல்.
என்னாயிற்று சின்னதாய் எரிந்தணையும் மின்மினிக்கு?
நேராகப் போக நேர்வது காணாது கலங்கும் மனதிற்கு
கதவு பக்கவாட்டிலாய்...
திரும்பியாக வேண்டும் இங்கிருந்து எப்புறமோ.
காலடியில் திறந்தவெளியா? திரிபுரமடைத் துளதா?
வரம் தருவார் யார் சுவர் துருவிச் செல்ல?
திரும்ப வேண்டும் சுரவேகத்தோடே நேராகப் போகும்
காலருகில் பறந்தபடி மின்மினி பளிச்சிடாது...

RangaRakes
tamilnavarasam.com

## கேள்எல்லை

சூழன்று கொண்டிருக்கிறது இசை.
சுவர்ப்பரப்பில் ஆணிமுனை.
சிமெண்ட் பெயருமோ சீக்கிரத்தில்?
சுத்தியலெங்கே?
சார்த்திய மூலை தேடிச் சேர சோம்பும் மனம்.
ஏறிய மலைகளிலிருந்தெல்லாம் இறங்கியாக
வேண்டும்.
அடியிருந்து பார்க்க
ஆகாசத்துக்குப் பயமுறுத்தும் தலைகள்.
இடைவெளிக்கப்பாலு மிப்பாலும்
இருபுள்ளித் துகள்கள்.
நடுவே பூமத்தியரேகை.
அடர்பாசி கல்மரம் முட்களும்
அடியெத்தனைகளில் அன்னென்னவும்...
கல்சிலை இசை ஓசை.
தன்னால் ஒளிராது தெருவிளக்கு.
புறம் அந்தப்புரம்.
கரம் இருள் நரம்பு மின்சாரம்
கால் மனம் சிரசு, ஸ்விட்ச்
குலுக்கிப் போட வரும்
விரல் வேறும்
இருந்துமிரா திருக்க
பிப்பட், குடுவை, மயில்துத்தம்,
பரிசோதனைக்குழாய், பார்த்த தூக்கம்...
திரும்பியபோது
திரும்பியிருக்கும் இசையும்.



## சிறைவெளி

பூமாரி பொழிந்திருந்தது வானம்.
பாதையெலாம் தேங்கியோடும் புதுவெள்ளம்
ஆங்காங்கு ஆடி பதித்த வண்ணம்.
வாங்க லாகா முத்துநவ ரத்தினம்
வந்திறங்கின இன்னுமின்னும்.

மரத்தடி முடங்கி நின்றாள் மனம்
மடை திறக்க.
ஓடவேண்டும் ஒரு தரமேனும்
உயிர் கழுவும் மழை தழுவ...
ஊர் மறக்க, பேர் மறக்க
பெண்ணெனும் பாழுணர் விறக்க...

அடுத்திருந்தா ளொருத்தி அழுக்குக்
கந்த லுடுத்தி.
செழுமை யோய்ந்த கை மழைச்சரம் வருட
அண்ணாந்த விழிகளில்
அதே விட்டு விடுதலையாகி ஓடும் வேட்கைச் சுரம்.

ஆனாலும் அங்கேயே ஆணியறைந்திருந்தனர்-
அறுபத்து முக்கோடி யாண்டு முட்கிரீடந் தாங்கி.

மற்றுமொரு சிலுவையும் பின்னவள் தலையில்.
மாற்றுச் சீலையில்லை மண்குடிசையில்.

RangaRakes
tamilnavarasam.com

## உம்ராவ் - ஜான்

உருண்டிறங்கின ஒன்றிரண்டு.
உள்ளுறைந்ததுலகு.
விரல்களிடை நழுவு நீராய்
அறுபட்டும் உறுத்தும் சிறகு ஞாபகம்.
கரைகளற்ற சிறைவழியே விரையும்
பாவனைப் பயணம்.
திரும்பத் திரும்ப இறக்கும் மறுமுனை.
தேவகானம் பொழிந்த நஞ்சுண்ட கண்டம்.
முட்படல மேலாய்
கள்ளிழைத்த அபிநயங்கள்...
கண் ணொலித்த ஒப்பாரி...
அழகமிர்தம்!
வழியத் தந்தவளின்
ஜ்வாஜல்யங் கடந்து
ஆளரவ மற்றிருந்த ஆன்மக் கீறல்கள்.
அகலா வலி...
சொப்பு பொம்மையாய் சூழ்ந்தவரிடை
இருந்தது இருந்தபடி இடப்பெயர்ச்சி
இடையறாது...
இடையிடையே நேர்ந்த மனங்கள் சில
இராத் தங்க மட்டுமாய்...
மூன் றொன்றாய் ஒன்று மூன்றாய் கண்டவளை
சந்தித்திருக்க வேண்டும்
வசந்தம் அருகிருப்பதாய் சொல்லிச் சென்றவனும்...

கம்பிகள் தெளிவாய்க் கண்ட அந்த
இறுதிப் பிரதிபிம்பம் பெறும்
பிரக்ஞையின் சிரத்சேதம்
காலப் பள்ளத்தாக்கில் எதிரொலித்துக் காததிர்கிறது.

ஆன்மத் தீக்கு என்றும் உள பொந்துகள்.



## ஏற்றம்

தலையைச் சுற்றித் தெரிகிறது ஒளிவட்டம்.
அலைமேல் நிலையாய் நடப்பது கூட.
காலிக்குவளைகளில் மது நிரம்பித்
தளும்பத் திரும்பத் தளும்பத் தளும்ப...
வால்குழைந்தோடும் ஆவினங்கள்
வாயுக் கால்களும் வர்ணக் கூவல்களுமாய்
நோய் நொடி நீங்கப் பெற்றுத்
தெருவின் இருமருங்கும் திரளாக நான்.
முனையரும்பிக் காத்திருக்கக் கூடுமென்றாலும்
நினைவு மறக்குமின்று முள்கிரீடமும்
முதுகுச்சிலுவையும்.

## இறக்கம்

அறியாமலே ஆரம்பமாகிவிட்ட அடிவாரப் பயணம்.
அப்படியும் சொல்ல முடியாதபடிக்கு
உச்சி மத்தியில் ஏதோ ஒரு புள்ளியிலிருந்து.
அச்சமய மத்தியும் ஆயிரம் உண்டு.
இப்புறமமர்ந்தவன் பார்வைக்குப்
பின்னோக்கிப் புகைவண்டி போதல் போல...?
இல்லை, இதொரு பிளவற்ற வட்டப்
பாதையாக...? இருந்தும்
விரையும் வேகமென்னவோ செங்குத்தாய்
இறங்குவதாகத் தான்...
இடறும் பொடிக்கற்களும்.

RangaRakes
tamilnavarasam.com

## சாஷிபூதம்

காற்றைப் பூட்டி மனிதர்கள் கட்டியிருந்த
கிணறு நடுவே
கருப்பையில் குழந்தையாய் கிடந்தான்
காலாவதியான விலாசத்தோடு.
காலில் சக்கரங் கட்டி கடந்து போய்க்
கொண்டிருந்தது வாழ்க்கை...
சிறகை திசைதிருப்ப அனுமதி யில்லை
பறவைப் பார்வைக்கு-
பரிட்சை போலும், தண்டனை போலும்.
சற்றைக்கு முன் அவன் சென்றிருந்த காட்சியாய்
சைக்கிள் நின்றிருந்தது அடுத்து.
காலப்பற்களின் எந்தக் கூர்முனை பட்டுயிர்
கந்தலா(க்) கியது..?
கணங்களை யார் துரத்திப் பிடிப்பது...?
சுற்றிலும் தெறித்துத் தேங்கி யிருந்தது
உதிரமும், உடற்கழிவுகளும்.
இதற்கு சிறிது முன்னம் வரையும்
தன் மலம் காணவும் மறுத்தவன்...
கண்ணி படீரென விடுபட்ட சப்தம்
கேட்டதோ எவருக் கேனும்...?
கார் சினிமா, சம்பளம், லட்சியம்,
சொல், உறவு, கனவு, காட்சி,
காலம்-
இன்னும்...
கண்பொறுக்க மாட்டாது சிதறியிருந்தது



விட்டுச் சென்றவை யெல்லாம்.
தொல்பொருளாராய்ச்சிக்குத் தப்பி,
சூஷ்மப் பார்வைக்கு மப்பால்,
அலைந்து கொண்டிருக்குமோ ஆழ்மனம்
அந்தரத்தில்...?
சீட்டுக் குலுக்கலில் நாங்கள் சேராதது
நோய்மருந்தாய்...
கேளாவோலம் காதெரிக்கிறது.
குறைந்தது
கடவுளுக்கு நான் சேர்த்து வைத்திருந்த நன்றிகளில்
ஒன்று.

RangaRakes

tamilnavarasam.com

## பொறிவாயில்

இப்பவும், இந்தப் புள்ளி யிலிருந்து
திரும்பி விடலாம் தான்
இடதும், வலதும், வந்த வழியும்...
இருந்தாலும் முன்னேறுங் கால்
முதுகில் பதியும் துப்பாக்கிக் குழல்.
காணோம் கடல்முத்து கிடைக்கும் தடயம்.
ஆறுபேர் ஆறாறு நாள் பறிக்க
அடி எட்டியிருக்கலாம் நரகம்.
நேர்த்தியாய் பரப்பிய இலைதழைக்கீழ்
நேரெதிரே விரிகுழி.

## கால தேச வர்த்தமானம்

இன்று இந்த ஜன்னலோரம் வீணானது.
வந்து போகும் மலையும், மடுவும்
மேய்ச்சல் மாடும், மேகங்களும்
வானத்து நீலமும்
மேல்நீளம் மீறுவதாய் மண்படர்ந்த
பசும்பரப்பும்
கண்சவத்தி லொட்டிய ஈக்களாய்...
உள்தங்கிய கங்குல் போதோ?
தாமரையிலை கையகப் பட்டதோ?
உறைந்துவிட்ட உள்பாவு முதிரம்
திரும்பவும் உருகும் நேரம்
நிழலற்ற நான்கு சுவர்களுக்குள்
விழுந்திருக்கக் கூடும் நான்.



## இருத்தலும் இருத்தல் நிமித்தமும்

தாமதமின்றி தாயம் அல்லது ஆறு தரத்
தெரிய வேண்டும் கைகளுக்கு.
தீராத் தாகம் ஒன்று கிடைக்க மற்றொன்றிற்கு.
தெரிந்த தந்திரமந்திரமெல்லாம் பிரயோகித்து
ஒவ்வொன்றாய் உள்ளிறக்கி ஆற்றொழுக்காய் முன்னேற்றி
அவ்வப்பொழுது ஞாபகமாய் அடுத்தவன் தலை கொய்து-
விழி நழுவலாகாது முன்செல்வோன் முதுகு.
கண்ணிரண்டு வேண்டும் பின்னும்.
பிறன் வீழவே வாய்க்கும் பழமேறல்.
உண்டு காண் மறாட்டமும்.
இருக்க வேண்டும் எதிரியும் பொருதலும்.
ஒரு கட்டத்தில் இருவர் கூடாது இடமிருந்தாலும்.
சேர்ந்துறைய வென ஆங்காங்கு நட்டிருக்கும்
சதுரப் பரப்புகளில் மட்டும்
சிரிக்கத் தெரிய வேண்டும்-
ரத்தமுறிஞ்சும் பற்களில் பால் வடிய.
நிறையவுண்டு விதிமுறைகள்.
நேரத்திற்கு நேரம் வேறாகு மாறு.
வேகமேற ஏற
புறப்பட்ட நாழியான புரியா இலக்கழிய
சேருமிடம் சுவாரசியங் கெட
வேரோட வரைச் சாய்த்தலும்
வேறொரு வன்முனையிருந்துன் சிரசு காத்தலுமே
வாழ்வாங்கு வாழ்வாய் வாழ்வாய்
வெட்டிக் கொண்டு தன்னைத் தானே.

RangaRakes tamilnavarasam.com

## வருமளவும்

எத்தனை நாழி தூண்டில் போட்டென்ன?
எதுவும் சிக்கவில்லை.
சந்தியாகி விட்டதோ?
சாத்தி விடும் வாதிலை யிருள்....
என்ன மாட்டினா லாகும் மீனுக்கு?
எவரேனும் சொல்லக் கிடைத்தால் சுலபமாகி
விடலாமெனில்
சொல்பவர் வெவ்வேறாய்
செல்நீர் பிளக்கும் தூண்டிலு மவ்வாறாய்
கரையும் மணலும் நீரடிக் கல்லும்
பாசமு முறையும்
ஜீவராசிக ளெல்லாம் விண்மீன்கணக்காக-
யார் சொல்லில் வாழும் என் மொழி?
உனக்கு மீன் எனக்கு முதலை
யவனுக்குப் பல்லி.
சாப்பிடுவது வேறாக சுவையுங் கூட.
சூத்திரச் சபை கொளாது சூறாவளி சதிராட.
சொல்லி மாளாது
சிறிதே நூலசைய சொடுக்கும் நரம்படுக்கும்
சமயத்தே கைகூடும் சுமையுணராது
சிலைத்திருந்த பாடு.
இன்னும் எத்தனை நேரம்
இங்கே இந்தப் புற்றுச் சுரங்கத்துள்?
நிறம் மாறி நாளாகிவிட்ட தாடிக் குழலும்
குழிவிழுந்த கண்ணும் வரியேறிய நுதலுமாய்
உள்ளிழுத்துப் பிடித்து வைத்த மூச்சு



உயிர்ச்சுவரசைத்து திர்க்க
பின்னும் தொடரும் இந்த மோனத்திலக்கு
மீன் தூண்டிலில் மட்டுந் தானா?
மதி கிறங்க
இதயம் எண்ணப் புகும் நன்றியோடு-
'இங்கிருந்து வெளியே' என்றவனை.

## கண்ணாமூச்சி ரே ரே...

'க்ளாவ'ரில் நான்கு அந்நியர்கள்.
ஆர்ட்டின் ஒன்று ஆழ்மனமாய்.
ஸ்பேடும் டைமண்டும் அரியணையில்.
முதலிடைக்கடையாய் மொழிமீறிய ஜோக்கர் மற்றது.
நாலும் ஏழும் ஏஸும் ஜாக்கியுமாய க்ளாவரை
நல்ல குடும்பமாக்கக் கடவுளுக்கும் கூடாது.
கூடுமோ ஜோக்கரால் ஒருக்கால்?
ஆழ்மனத்தருகில் யாரேகக் கூடும்?
கூடுமோ ஜோக்கரால் ஒருக்கால்?
ஸ்பேடிரண்டோ டிணைய, நாமிருவரின் நமக்கொருவன்.
டயமண்டோடெனில் நல்லாசானாய்...
யார் கூடப் பிடிக்கும் நிறமற்ற ஜோக்கருறவு?
குழம்பிச் சமைந்ததில்
கீழமைந்த அடுக்கிலிருந்து சீட்டெடுத்தல்
மறந்து போக
கிழித்துப் பறக்க விட்டுக் கிளம்பிப் போவான்
காலக் கூட்டாளி.

RangaRakes tamilnavarasam.com

## குறைமனம்

வள்ளுவர் மன்னிக்க வேண்டும்.
விருந்தினரை வரவேற்கும்படியா விளங்குகிறது வீடு?
கால்பதியுமிடமெல்லாம் காலத்தூசி; காகிதக் கிழிசல்.
கண்ணுயரக் காணும் வலைச்சிலந்திகள்.
உத்தரமெல்லாம் அனல் புனல் கசிவு.
பழைய பாய், பிய்ந்து போன தலையணை.
நாளரித்த கள்ளிப்பெட்டி நிறைய
காணாமல் போனவரின் காலடித் தடங்கள்.
இருள் கவிந்தும் ஏற்றப்படாத விளக்கு திரியற்று.
தாழற்ற கதவும், திறக்காத ஜன்னலும்
அட்டவணைக் கட்டங்களை அடித்தோடும் ஆயிரமும்...
அகத்தொரு கால் புறத்தொரு கால் ஊன்றி
இன்று போய் நாளை வர
நின்றிருக்காத விருந்தின் நினைவில்
அனிச்சவாசம் அறைகளெங்கும்.
அழகுபடுத்த அந்நியமாகிவிடும் வீடு.
அப்பால்-
விருந்தோம்ப யார் நான்?
விருந்தும் தான்?



## நகம்

எனக்கு நகங்களுண்டு.
உள்ளவை
கனவா நனவாவெனக் கிள்ள உதவும்.
நினைவின் கனத்தில் கடித்துக் கரைக்க
விரைந்து வளரும் விழைவாய்.
நகம் விரலின் முகம்.
நம் கைத்தீயாகும்.

## வியாபாரம்

பிணைப்புச் சங்கிலி க்ஷணத்தில் இணைப்பறுந்தது.
அசுரகணமாய் சிரசில் பொருந்தின பாதங்கள்.
பீரிட்டு நின்ற பிச்சுவாப் பற்கள், நகங்கள்...
புவியீர்ப்பு விசையழுத்தப் பிறந்த வருடலில்
மதம் நீங்கி நண்பனாகி நின்றது
நாவும் வாலுமாட.
அதிர்ந்திருந்த அக்கம்பக்கம் அதிகமாய்
விதிர்த்தது அதிசயத்தில்.
அடியெடுத்துச் சென்றேன், அன்பைப் பொருளாக்கிய
துன்பம் பின்தொடர.

RangaRakes
tamilnavarasam.com

## ஜன்னல்

இரண்டடிக்கு இரண்டடி சதுரம்-
காற்று வர, வெளிச்சம் தர.
இடையே இரண்டொரு கம்பிகள்
வெளி பார்க்க ஊன்றுகோலாய்.
ஊனக்கண் மங்கி உட்கண் விழிக்கும் நாழி
நடுநடுவே தடுத்து நடப்புரைக்கவாய்.
எனில் கம்பிகளையெதற்கு முனை சுருட்டி
நீட்டி, பரப்பி
கொடியாக்கி, இலையாக்கி, கொத்துமலராக்கி
தலை,கால், மனிதனாக்கி
வட்டமாய், கட்டமாய், வளைவளையாய்,
வலைவலையாய்
தொட்டாலே வெட்டும், குத்தும் குரோதமாய்
விரோதமாக்கி விட்டார்?
பார்வை புதருக்குள்ளிருந்து பார்க்கிறது.
காற்றின் வேகத்தையும் கிளைகள் தகர்த்து
தெருவோடே துரத்தி விடுகின்றன.
அறை நிறைய வெப்பம்; புழுதி.
ஜன்னல் சுண்ணாம்படித்தலுக்கே என்றானது.
அடித்ததன் மேலாய் அடித்தடித்து அப்பியப்பி
கம்பிகள் தடித்து இடைவெளி அடைத்துக்
கொண்டது.
கண்பார்த்ததெல்லாம் வண்ணப் பிசுக்குகள்.
மனிதர்கள் வண்ணப்பரப்பின் மீது மோதி மோதி
வியர்வை யுதிரங் கசகசக்கக் களித்தனர்.
மறுபுறமுள்ள தெருபற்றி, தென்றல் பற்றி
வெளிபற்றி, ஒளிபற்றி, இன்னும் பலப்பல பற்றி
பிரக்ஞையற்றுப் போனது.
பிரதிமைகளே உயிரானது.
திரும்புமிடமெங்கும் நிரம்பின இருட்சாளரங்கள்.



## சொல்

ஆறெங்கும் பரப்பப்பட்டிருக்கின்றன
முன்போனவர் போகிறவர்களின்
நன்மை செய்வதான நினைப்பும் பாவனையுமாய்...
அலையலையாய் தலையைச் சுற்றி வந்து
துளை தேடுகின்றன.
வலைப்பயணம்.
வேரறுக்கும் ஆரவாரம்; ரீங்கரிப்பு.
மரபாய், பரப்பப்பட்டதைப் பொறுக்கிக் கொண்டும்
உறுமுடிச்சவிழ்த்திறைத்துமாய்
விரையுங் கூட்டம்.
தரைப்பாசியில் கால்கள் குறுகுறுத்துக் கூசியபடி.
வேர்க்கிறதென்று விலகிச் சென்றாலும்
சேர்த்திழுத்துப் போர்த்தும் போர்த்திய சூழாம்.
சால்வை யிறுக்கத்தில் கமறும்.
பின்புறமாய் கட்டப்பட்ட கைகளோடே
பாதம் தொடங்கி ஊர்ந்து படரும்
புழு உணர்தலாய்
சொடுக்கும் மனம் திமிறி யடங்கும்.

## ஏற்பு

நேற்றிந் நேரம் நிறைய அழுதிருந்தேன்.
முட்களிட்ட பாதைகள், பாதங்கள்
வெட்டுப்பட்டுப் போயாக வேண்டிய பயணம்.
கட்டாயம் உடன்வருவோர். பிடிக்காத
நிறங்களில் வெற்றிருளிறங்க...
இப்பொழுது இதமானது ஆறு
எதிர்மறைகள் ஒதுங்கிப் போக.
நதியோட்டத்தில் நாளை நேற்றாகும்.
இன்று என்றைக்கும்!

RangaRakes
tamilnavarasam.com

## மிதவையினும்

சுற்றிலும் நீர், விரல் துளையடைக்க வாசம்.
சற்றே கை தளர பெருகிப் புகுந்து
நிரம்பி விடும் உள்.
வெளித்தள்ள வாயகலத் திறக்க
மேலும் புகும்.
அரிப்பெடுக்கும் சுவர்கள்.
தரை மறையும்...
சிந்நேரம் சலனப்பரப்பு நீங்கி
மேலெழும்பிச் சுமை களைந்து
மறுபடி இறங்கிவிட முடிய வேண்டும்...

## இறுதியென்ப...

'இறுதி வரை போராடுவோம்'.
சுருதி பிரியாமல் சொல்லிப்
பிரிய
ஒரு குரல் உள்ளுறுத்தும்:
'இறுதி யென்ப...?'

## கடை

விளிம்பு. கூர்த்து, வளைந்து, மழுங்கி,
உள்கவிந்துருண்டு,
நான்கு மூலைக் கட்டமாய்,
நெடுக உயர்ந்து,
தரைமட்டத்திற் கருகாய்,
தலையெழும்பியபடி,
பளபளத்து, பிடியுடைத்துமாய்
திட திரவ வாயுவைப்
பிடித்து உள்ளடக்கி
கசப்பும், இனிப்பும், காரமும், துவர்ப்பும்
துர்மணமும், சுகந்தமும் மொண்டு வந்தபடி
வரிசை வரிசையாய் வெற்றுப் பாண்டங்கள்.



## தாகம்

1) அற்றகுளத்து அறுநீர்ப் பறவைகள்
உறுவிடமறிந்து சிறகு விரிந்து
இடம் பெயரலாம்.
நாம்...?

2) முன்னம் குழாய் திறந்தென் தினங்கழிய
அவர்கள் கிணற்று நீர் இழுத்திருக்க
குற்றவாளியாயுணர்ந்தேன்.
இன்று குழாய் கானலாய் நானும் கிணற்றடியில்.
இன்னும் குற்றவாளியாயுணர்ந்தேன்.

3) குழாய்களுக்குள் சிலந்தி வலைகள்
இழைகுலையாமல்.
தபஸ் கலையும் அச்சமில்லை பூச்சிக்கு.
நீர்வரப் பார்க்கும் நம்பிக்கையும்
வழக்கொழிந்து நாளாயிற்று.
வைகறை தொடங்கி நூறு முறை
கிணற்று நீரை வாளி கழுத்தறுக்க-
வழியத் தளும்பி வருவது
வியர்வையா? உதிரமா?

RangaRakes tamilnavarasam.com

## இரண்டாவது இருள்

இருளின் ஒளியில் இதுகாறும் பயணம்.
இடறிய முட்களும் கற்களும்
கிழித்துக் காந்திய காயங்களுக் கெல்லாம்
இருளே மருந்தானது.
கால்சோரும் நேரமெலாம் கனவழைத்துத் தந்தது.
நிழல் வெயிலுக்கு விரித்து
ஜுர ஜன்னிக்குக் கம்பளி போர்த்தி
அடுத்து நேர்ந்தது அகழியோ-
நாய் நரி சிங்கம் புலியோ-
இருந்தது கவசமாய்.

ஆர்வமிறைத்தது அறியாத அடுத்த அடி.
தூரங்காலம், வெளிச்சப்படலம், அன்னபிற..

முத்தாய்ப்பாய் இன்றொரு வெள்ளி முளைத்திருந்தது.

## தோற்றம்

காற்று வீசும்.
சூரியவொளி வரும்.
மழைவெயிலுக்கு நிழலாய்
மேற்கூரை. மனிதர்களுமுண்டு
சுற்றுப்புறத்தில்...
கதவும், சாளரமும், பக்கச்சுவர்களும்
தரைப்பரப்புமாய்-
வீடு போலவே இருக்கும் சிறை.



## அதற்காயது

தாரை தம்பட்டை கரகாட்டம் பட்டாசு
சடங்கு சம்பிரதாய வெடிச்சிரிப்பு ஒப்பாரி
முன்பின்னாய் மனிதர்கள்...
ஒன்று குறைவில்லை.
ஆறா ஊர்வலம் அடுத்தொரு அடி நேரும்
ஆறடிக்காய்.
தீயருந்தி மண்விழுங்கி எருக்கம்புல் முளைக்க
இன்றடர்ந்த சாலை வழி
காயமோட வாயுமாட தான் கிடந்து
நடந்திருக்கும் உயிர்ச்சவம்.

## ஆமையோடு

அகத்தின் ஒளிச்சிதறல் வெளிக்கேட்டு விடக்கூடாது.
சலனங்களுக்கு சரியான உரைகாரர்கள் குறைவு.
கல்லாய் குமிழ் தாங்கும் உள்ளங்கையில்லை தான்.
விரிந்து சுருங்கும் உதடுகளின் இருப்புப்பாதை,
கூகுக்கூ வெனப் பின்னோடும் வண்டி,
தள்ளி நிற்பவர் பிடிக்கத்
துரத்தி வாரா உள்நிறுத்தம்,
தெரியாது பிற பயணிகளுக்கு.
முகத்தின் கால்களை விறைத்து நீட்டிப் போட்டேன்.
கண்சிமிட்டல் கட்டுப்படாது தான்.
கன்னத்தில் ஈயெறும்பு உட்காரா திருக்கட்டும்.

RangaRakes

tamilnavarasam.com

## குமிழ்

தூரமதித்தே யானாலும் பார்த்துக் கொண்டு விட்டோம்.
கண்ணில் தூசு விழுந்ததாய் கடந்து போனோம்.
துரத்து முன் துரத்தி விட்டாலும்
திரும்பிப் பாராதிருக்க முடியவில்லை.
விரலுக்கிடை ஈரக்கசிவாய் வாராக் காலம்.
நீரொன்று, அலையொன்று, கரையொன்றானாலும்
வேறாயிருக்கலாம் மண்நிறம்...
கடிக்கத் தொடங்கிய செருப்போடு நடந்தேன்.
நேராதிருந்திருக்கலாம் அந்த நாளும்.

## அடையாளம்

இந்தக் கைக்கடிகாரம்
நிச்சயம் என்னுடையதுதான்.
இன்றை நேற்றாக்கி நிற்கிறது.
என்றாலும், ஓரிரு நிமிடங்கள் அதிகமாயும்,
நேரங் காட்டுகிறது சரியாய்!



## பறை

நானே வாள்சுழற்றி, நானே விழுந்துபட்டு
நானே அசோக பௌத்தனாய், ஆங்கில
மொகலரசர்களுமாகி,
கால் மாற்றி நிற்பதாய் மாறி மாறி
வெற்றி தோல்வி பெற்றும் பெறாமலும்
வளரும் பெரும்போர் ஆளரவமற்று.
காற்றோடு கடிதமும் வீசுஜன்னல் களமாக.

## முழுமை

முழுஎண் தேடிப் பயணம்-
நானெனும் பின்னத்துள்.
ஆனவரை யானதைக் கூட்டிக் கழித்துப்
பெருக்கி, வகுக்க-
காணவில்லை அந்தக் கனவை. ஆனாலும்
ஆன்மாவோடு அருவ உறவாடுகிறது
காற்றுக் கரமாய் தலைவருடி.
கானலானாலும் கண்தாகம் தீரும் தான்.
அட்சர சுத்தமாய் நட்சத்திரங்களை எண்ணிவிட்டால்
அப்புறம் என்ன செய்ய?
தட்டித் திறக்கக் காக்கும் தருணங்கள்
கோடி பெறும்.
திறக்கப் புரியும், பாராததால்
வானவில் பேரழகென்றும்.

RangaRakes
tamilnavarasam.com

## பனியுருக்கு

நாளிறக்கும் வேளை.
காலின்றிக் கிளைத்து நிழல்பரப்பும் போதிமரமாய்
நாளங்களைப் பிளந்து கலந்தது மண்வாசம்.
சாளரத்துப்புறம் மண்டிய இருள் கண்பறித்தாலும்
மழையுருக் காட்டியது நுகர்வு மண்டலம்.
அடைப்பு நீங்க
மடையொன்று திறந்து கொண்டது
மோதிப் பாய்ந்த நீரில் மிதந்து வந்தது
இறுக்கம் போர்த்திய மனதின் இளைப்பாறல்.
இரட்டைத் தாழிட்ட இதழ்களும்
இளகிப் பிரிந்திருக்கும்.
வெறுமையடித்துக் கொண்டு போன விழிகளில்
வந்தேறி யிருக்கும் வாழ்வு.
இரும்பு சுமந்து காய்ப்பேறிய விரல்கள்
வெளிப் பூஞ்சரம் வருடி மிருதுவாயிருக்கும்.
கும்பி சூடு தணியக் குளிர்ந்திருக்கும்
கவிதையாய்....



## விடுகவிதை

ஒன்றிரண்டு மூன்று நான்கு
ஐந்தொன்ப திருபதாங்கு
முக்கோடி முப்பத்து பூஜ்யம் சூழ
மூவேழுலகும் எட்டு மாறும்
வகுத்துப் பெருக்கிக் கூட்டிக் கழி.
என் கணக்காகுமென் வழி.

## காணிநிலந் தாண்டி...

ஆறு கால்களும் எட்டு கைகளும் இருந்தால் போதும்
வாழ்வை நடந்து கைக்கொண்டு விட ஏலும் போலும்.
மறவாமல் இருபாதை பிரிய வேண்டும் பார்வை.
கணணிரண்டு கூட வேண்டும் பின் மண்டையில்.
விரல்கள் அதிகமாக, வாரக் கூடுமோ காலத்துகள்களை?
இரவல் மனம் இருபது வேண்டும், ஒரு நாள்
இருபத்தி நானூறு மணிகள் வேண்டும்...
இன்னும்... இன்னென்னவும்... இன்னும்...

RangaRakes
tamilnavarasam.com

## இரங்கற்பா

தும்பிகளால் அறுபட்டும் குறையாமல் சிரித்தபடி
நிலவு பொழிந்து கொண்டிருந்தது-
ஊர் மீது; ஊன் மீது; உயிர் மீது!
எங்கெங்கு காணினும் நிலாமயம்!
சூழ நிலாமணம்!
ஆழ உள்ளிழுக்கும் மனம் அனத்தும்:
'நிலவைப் பெண்ணெனல் எத்தனை சுயநலம்!'
தடையறாத் தழுவலுக்காய் திறந்த வாயிலோரம்
செல்ல, சொல்லும் ஒரு சொல்
பின்னிருந்து-
''எவன் ஏய்த்தானோ, எமனுக்குப் போகிறானோ''
நின்றன கால்கள்.
என் இம்சை கண்டு நேயக் கலகலப்பில்
நகைப்பதாய்
தடுக்கி விழுந்து எழுந்து ருண்டு
துள்ளிக் குதித்தோடி வருகிறது நிலா
வண்டியோட்டத்திற்குச் சவாலாய்!
தூக்கித் தடவ வேண்டுமாய்க் காந்தும் ஏக்கம்.
'இருக்கட்டும். இறங்கிச் செல்கையில்
இருண்ட அந்த வழித் தடத்தில்
இறுக்கிக் கொள்வேன் உன்னை!'
நாலெட்டில் தொடருமொரு மூட்டைப்பூச்சி ஆட்டோ
முகம் பார்க்கும்; தயங்கும்; முன்னேகும் மெதுமெதுவே.
மிதிவண்டி ஆளொருவன் மெலிதாய் உரசி மீள்வான்.
'யாரது யாரது தங்கமா'வின் அதி மலிவுப் பதிப்பை
வீறிடும் தெருவோரக் கடை.
நெட்டித் தள்ளும், நிற்பவனொருவனின் சாராய வாடை.
முட்டியும், ஆடுசதையும் சுண்டியிழுக்க
விரைவோட்டப் பந்தயமாய் நடக்கையிலும்
கூட வரும் அதே நிலா-
வெளிர்மஞ்சள் தெருவிளக்காய்.



## கொள்கலம்

ஆளரவ மற்ற அந்தி வனாந்திரத்தில்
தளதளத்துப் பெய்த தொரு மழை யெனக்காய்.
கனியும் அன்பில் ஆன போதும்
நனையாத ஊனும் உயிரும்
அனத்தும் தனக்குள்:
'எதை உள்வாங்கவும் சில நிபந்தனைகள் உண்டுதான்.'
தூறலாகி நின்று போக, தொடருமொரு கேள்வியும்:
'பொழிந்தது மெனக்காயோ? இல்லை, பருவத்தின் பய
னாயோ?'

## காலப்பொருள்

மைக்களிம்பும் மருந்து வரிகளுமாய்
மடலொன்று வரக்கூடும்-
என்றேனுமொரு தினம்.
இன்று ரணம்.

## திரிசங்கு

எழுதினாலும் நான் இந்த வரிகளை
எழுதுவதும் இல்லை தான்.
மொழிவதுமில்லை.
மொழிந்தும்
சப்தநிசப்தத்திடை வழியில் ஒரு
அசந்தர்ப்பமாய் சிக்கிக் கொண்டதாய்...

RangaRakes
tamilnavarasam.com

## போகுமாறு

ஒற்றையடிப் பாதையில் பிரயாணம்-
நாளூர்களினூடாய்.
வார்த்தைச் சில்லறைகள் வழிச்செலவுக்கு.
ராத்தங்க சில மனங்கள்.

## இயலாமை

கொந்தளிப்புகளை யெல்லாம் அடக்கி யொடுக்கி
கோழை யலையாய் நீர்த்து
கால் பல இதமாய் வருடித் தருகிறேன்.
ஆளாளுக்கு என்னை அதிகம் பிடிக்கிறது.
அதுபோதும் என்றிருந்திட முடிய வேண்டும்
எனக்கு.

## தொங்கு தானம்

தேவதைகள் நளினமானவை.
எப்பொழுதும் அழகாக இருக்க வேண்டும் அவை.
தேவதைகள் தூய்மையானவை.
தூசிபடியாது தற்காத்துக் கொள்ளவேண்டும்
வெண்ணுடம்பை.
கவனமாயிருக்க வேண்டும்
கடவுளுக்குக் கூப்பிடு தூரத்திலும்
சாத்தானுக்கு சேய்மையிலும்
மனிதனுக்கு மேலாகவும்.

பேயரசாண்டாலே பேரானந்தம்!



## நிறமாலை

பின்னும் கனத்த போர்வையை
தொங்க விடுகிறேன்
எனக்கு நினைவுக்கும் இடையே.
பழகும் விழி யிருள் வழியின்
திரை யூடாய்த் தெரியும்
சொப்பன வேலைப்பாடுகள்.

## வேலியேற்றம்

பாதம் தொட்டுப் போகும் அலை சில
சுரீரென பூமி சாய்க்கும்.
ஏதலை யேனும் என்னை
விழுங்க வேண்டும் முழுவதுமாய்.
ஓங்காரக் கள்வெறியில் நுரைபொங்கிச்
சுருளலைக்குள் சரியாதிருந்தவன் சிரித்து
நின்று விட்டான் நினைவுக்குள்.

RangaRakes
tamilnavarasam.com

## இன்னொரு கூடு

ஒரு செய்தியாய் சொன்னாள் சொல்வதாய்.
''போய்விட்டார். பத்து நாள் காய்ச்சல்''
விழாத 'செத்து' வழிமறித்தது.
விளம்பரித்துக் கிளம்பிய லாவாவை
விரலெரியத் தேய்த்து விட்டாள்.
உள்ளே கனத்துக் கிடந்தது நீர்ப்பாறை.
தன்னை ஆஹீதியாக்கி வளர்த்தது வெளித்தள்ளியது.
பத்து நாள் இல்உள்ளாய் இழப்படைகாத்து
பத்தோடு பத்துக்குப் பதினொன்றாகி
பத்திரம் தொலைத்தவளூற்ற விட்டிற்கணங்கள்
கட்டிப் போட்ட உடல்ரணத்தறையும்
கள்ளிச் சாட்டையாய்...
தேறுமோ மனது வேறெதற்கும் மேல்
இதுவெனத் தேர்ந்து?
தெருமுனை யொவ்வொரு முறையும் திருப்பிப்
போடுமோ?
போடும் முழம் வெறுங்கையே...
நாலும் பரிமாறிச் சென்றோம் நேர்ப்பார்வை தவிர.
கூறாதன தடுக்கத் தடுக்க நடந்தேன் கூட.
கூடு விட்டுக் கூடு பாயா கொடுப்பினை கூடியுங்
கூடாமலும்...



## அலைமுகம்

.........................................
எந்த மரத்தடியிலாவது நான் நின்று
கொண்டிருக்க வேண்டும்.
கூர்முனை பட்டுடையும் காற்றடை பைகளற்று
தெளிந்தோடியிருக்க வேண்டும் ஆறு நீர்ப்பளிங்காய்.
அண்ணாந்து அருவியாய் தெறித்தோட
வேண்டும் நானும் - நாலு பூஜ்யமாக.
தாளிட்ட கதவிற் கிப்புறம்
கேளாக் காலடியோசைக்கான கடுந்தவத்தின் முடிவாய்
காற்றுக்கு மாற்றாய் கரமொன்று வருடக்
கேட்க வேண்டும். திறக்க
வரவேற்பாய் வைரம் இழைத்த படிகளில்
சிற்பம் வரை பாதங்களோடு
எந்தத் தேவதையாவது எதிர்ப்பட வேண்டும்
ஈரஞ்சொட்டச் சொட்ட
கண்கொள்ளா புன்சிரிப்பும் அன்புமாகி...
என்னவாவது நடக்க வேண்டும்
இந்த மழைக்கு
குரலுருவாய் குழம்பித் தளும்பும் மனதின் வரிவடிவாய்.

RangaRakes
tamilnavarasam.com

## 5B+

அவர் சொன்னது சரிதான்.
அதை யிதை ஏன் எண்ண வேண்டும்?
அஞ்சு B போதும்.
ஆனால், எல்லார் வீட்டுக்கும் போகாது அஞ்சு B.
எல்லா வீட்டுக்கும்.
வீடெது அகதியின்?
விரையுமோ நரம்பற்குள்ளாய்?
அஞ்சு Bயா அஞ்சு B?
7C, 12G, 45A, 36F...
அஞ்சு B என்றால் ஆறு...?
B சொன்ன தெவ்வாறு?
'ஏக் அனேக்'
தூக்கத்திற்கு?
எந்தத் திங்கள் சந்தை நடப்பு
சென்று வருவது கொடுத்து
இன்றெடுப்பது?
- வண்டி வெளிச்சம் கண்களாய்
எல்லாப் 'பல்லவ'னும் பின்னிய
எல்லையற்ற அஞ்சு B முன்னால்...
சில சக்கரம் சூம்பித் தெரிய,
சூத்திரம் புரிவதாக...



## புறப்பாடு

அகழ்ந்தெடுத்த கடலின் உறைநிலையாய்
அழுந்த மூடிய மதிற்புறத்தே
முட்டி மோதி விழுந்தெழுந்து
வெளியேறப் பிரயத்தனம் விடாது...
ஒளிக்கீறலாய் தெரியும் திறப்பில்
நுழையப் புகுந்து
நாளங்கள் நசுக்குண்டு கசிகிறது உயிர்.
காலம் போல தடித்துயர்ந்த கண்ணாடிப் பரப்பில்
சிறகாலும் சிறுகாலும் சுவடுகள் பதித்தது
திரும்பத் திரும்ப, சொல்லுருக் கப்பால்.
அலகு சீவப்பட்டது ஆகாயந் தடவை.
அருவக்கம்பிகள் கிழிக்க
பிரபஞ்சம் பரவும் விழித்தழல்.
வாய்த்த குச்சுவெளியில் வாய்மூடா
சிறகிரைச்சல்.
காற்று பைக்குள் துளையடைத்துப்
புடைத்த வாயு
உடைப்பெடுத்துப் பாய
கடற்சுவரில் சில கல்பெயரும் நேரம்
மறவாதிருக்க வேண்டும்
பறக்க.

RangaRakes
tamilnavarasam.com

## வெளிப்பாடு

இடத்தைச் சொல்லி விட்டு மறைந்து கொள்ளும் குழந்தை!
காணவில்லை யென்று எங்கெல்லாமோ தேடுவேன்.
சுருள்தலையிலோர் பிரியுயர்ந்து எட்டிப் பார்க்கும்!
ஒற்றைக் கண் பின்தொடர்ந்து
உளவு பார்த்துப் பதுங்கும்!
வெளியில் முளைத்த கனவாய்
கதவைப் பற்றியிருக்கும் பூங்கொத்து விரல்கள்!
அடிக்கொரு தரம் கிளி மிழற்றும்.
''என்னைத் தேடுகிறாய் தானே?'' என வினவும்!
''என்னைத் தானே தேடுகிறாய்?'' எனவும்!
அனுதாபப்பட்டோ, ஆற்ற மாட்டாமலோ
தனக்காயோ, எனக்காயோ
கள்ளவெள்ளமாய் பீறிட்டேகி யெனை
அள்ளிக் கட்டிச் சிரிக்கும் கணம்
அறைநிறையும் உயிர்மணம்!
வளர வளர
மறைவிடங்களும் வளரும் தானே!



## சிதைவொழுங்கு

**வா**னவில் ஏழு நிறம்
வான் கோழி கான மயில்
வாயு தென்றல் புயல்
வேகம்
ஆற்று நீரோடுமோடும்
ஆயிரங் கனாக்குமிழ்கள்
'அப்பா பணத்தை எண்ணக் காணாது.
அம்மா புடவையை மடிக்க லாகாது.'
வான் மண் ஏன் என்
னென்னெல்லா மெதிர்
கொண்டோர்
நேற்று இன்று
நாளை மற்றுமொரு நாளே
பெயர் மறந்த முகங்கள்
பெயரே யான முகங்கள்
பிரதிமை சாயை ரூப
அரூப
பின் பின் பின்
புண்ணாக்கு வைக்கோல் காளை மாடு
பசு கன்று தின்று
யாரை யார் என்று
ஏறாதோ வேப்பமரம் வேதாளம்
பாருக்குள்ளே நல்ல நாடு
Nut Shellக்குள்
ஷெல்லி சோகம் வசந்தம்
வசம் தம் உம்...
கொள் மனம் கண்டதையும்
கட்டுடைத்து
இல்லையிப்போதாக.

RangaRakes
tamilnavarasam.com

## குவியத் தூரம்

இந்த சொல்லை
தாற்காலிக இறப்புக்கு தாரைவார்த்து விடாமல்
நாளை கொண்டு போய் சேர்த்திட வேண்டும்
பத்திரமாய் நினைவிடம்.

மறுபிறவி காலை, சில
வெளிச்சத்தைக் கண்டதும் வழி தெரிந்தவையாய்
வந்து சேர்ந்து விடும். சில
சமிக்ஞைகள் சிலவற்றில் இடமடைந்து விடும்.
சாயம் மாறி சில...
காயம் மாறி சில.. சில
வில் அம்பு குறி மாறி
அடர்ப்புதர்க் காட்டு மரங்களில்
எந்த உச்சிக் கிளையிலோ
கண்ணுக்கப்பால்
தைத்துக் கிடப்பதாய்...



## மின்கடத்தி

வெற்றுக் குறிப்பேடு என்று தான் வெளியே எடுத்தது.
பத்திருபது பக்கத்திற்கொன்றாய் பூத்துக் கிடந்தன
சில வரிகள்.
விழித்தது இறந்த காலம்.
நிழலாய்த் தெரிந்த அன்றின் முகம்
அழச் சொன்னது மறதிக்கும்.
வெறும் விவரக்குறிப்புகளே என்றாலும்
நினைவின் முடிச்சுக்களைப் பற்றித் தொற்றும்
வரியிடை வரிகள்.
விரல்கள்.
வறுமைச் சுருக்கம் இன்று
வயதின் சுருக்கமாய் வருமொரு
நாள் இனி
வாழ்வின் குறிகள் பொறிக்கப்பட்ட
திரு அருவமாகி...
நெகிழ்வுறு மனம் பதறப் பதற
அகல நீள மதிகமாகும் அகழி
அடுத்த பக்கத்தில்
அகலக்கால் வைக்கும் நான்
ஆடிக்காற்றில் அலைப்புறும்
அந்தரத் தூளியிலே
அழுகுழந்தையாய்.

RangaRakes
tamilnavarasam.com

## பதினொன்று

எல்லோரையும் போல் நானும்
இந்தக் கடற்கரையில் காத்திருக்கிறேன்
மணலில் பெயர் எழுதி வைத்து
அலை வந்து அழிப்பதற்காய்.
கலைக்கலாகும் எல்லை தாண்டி
கிறுக்கி வைத்திருக்கும் என்னைப் பார்த்துக்
கனியச் சிரிக்கிறது கடல்.
உன்னைப் போல் எத்தனை பார்த்தாகி விட்டதென
பொய்யாய்ப் பெருமூச்செறிகிறதோ?
யார் காலடியும் மிதித்து விடாதபடி
அடைகாத்துக் கொண்டிருக்கிறேன்.
மழை வேறு தீரத்தில் பெய்யட்டும்.
அலைமட்டுமே அழிக்கலாம்.
ஆனால், அதன் கையெட்டும் தொலைவிற்கப்பால்
எழுதித் தொலைத்திருக்கிறேனே என் செய்ய?
'தொலையாமலிருக்கத் தானே செய்தது!'
கடலாழத்திருந்தொரு குரல் கேலி செய்கிறது...
மணலில் பெயர் பொறித்து அதை
பாயும் நீர்த்தனல் எரிக்கும்
அணுக்கணத்திற்காய் பதைபதைத்து
ஆங்காலம் போங்காலம்
எல்லோரையும் போல்தான் நானும்
இந்தக் கடற்கரையில் காத்துக்
கொண்டிருக்கிறேன்......



## நேர்(மறை)முகம்

''அமருங்கள்''
மார்பு வரையான சிலைகள், அன்றி
மீதமற்ற யக்க்ஷர்களாய்-
முகங்கள் பதினைந்து போல்.
கண்டது ஐந்தேழெனில்
கொண்டதிரண்டு மூன்று.
நடுவற்ற நடுவான நாற்காலியில்
நானும் நானும்.
மந்திரமாய்ப் பொதிந்து தருகிறேன்
பதில்களையெல்லாம்.
'சிதறாமல் கைமாற்றினாலும்,
சேதாரம் தப்புமோ?'
அவசரமாய் நீளும் கரங்களைப்
பரிகசிக்கிறது நான்.
அரிதாரத்தில் தான் எத்தனை நிறங்கள்!
'திருவாய் மூடு பரதேவதையே...'
பாடிக் காண்பிக்கிறேன். ஆடியும் கூட.
தொக்கிக் கண்டது 'எண்' பாவங்கள்
ஒன்றிரண்டு கூடக் குறைய.
கைதட்டலூடே காட்டுகிறான்-
விலகிய ஜதி சுருதியை நான்.
எடுக்கவோ, கோர்க்கவோ...
உழலும் நான் அழிந்து
சுழன்று சுழன்று சுழன்று...
விடைபெற்று விரையும் நேரம்
இரை வேண்டும் நான் கோரும்
வழிமறித்து
''திரை விழுந்தது முடிவிலா? நடுவிலா?''

RangaRakes
tamilnavarasam.com

## வெளியில் உலவும் வீனஸ் தேவதை!

நிலவூறும் முகம் நெகிழ் நட்சத்திரக் கண்கள்
கணக் கலைடாஸ்கோப் கோலங்களாய்
காலாதீத வானவில் பாவங்கள்!
ஆலவிழுதாய் நீளுங் காலுங் கையும்
நெஞ்சிறங்கிப் பிடித்தன வேர்!
குமிழ்குமிழாயும், குபீரெனப் பாய்
அருவிக்காடென்றேயும்
பெருகிய சிரிப்பொரு புத்துயிர்ப்பாய்!
சொல்லும் சொல் வாயூடாய் மட்டுமின்றி
காயமுச்சூடுமாய் எட்டிய மாயத்தில்
காற்சங்கிலி காலச் சங்கிலி சில கழல
கண்ட காலையெலாங் கண்டன சில கவின்
மின்னற்சிறகுகள்!



## மௌனவோலம்

வழியெங்கும் சிதறியிருக்கின்றன வாளறுத்த யோனிகள்.
அப்பொழுதே அறுபட்டுக் குருதி பெருக்கி யிருப்பவை.
அனாதி காலந் தொட்டு ஆறாக் காய முற்றவை.
விழிநீரும் உதிரமுமாய் நிலைகுலைக்கும் பாதைகளில்
அடிக்கொன்றாய் மிதிபடும் முறிக்கப்பட்ட முலைகள்.
தெறித்துதிரும் கண்மணிகள் அலைகடலாழம் மூழ்க
துடிக்கத் துடிக்கப் பிடுங்கி யெறியப்பட்ட பூந்தொடைகள்
ஐந்து வயதிற்கும் அறுபதெழுபதுக்கும் இடைப்பட்டவை.
நைந்தழியும் கனவுகளை யெல்லாம் கழுகுகள்
கொத்திக் கொழிக்கும். கழுத்தில்
முடிச்சிட்டு மூச்சிறுக்கி மேளதாளத்துடன் கிழிபடுவன
வலிபொறுத்து விருப்பறுத்து வம்சவிருத்திக் கடன்
கழிக்கும்.
வறுமை யொரு வாளாய் விபச்சாரக் குழி வழிய
தழும்பணிந்த யோனிகள்.
யோனி பிளத்தல் இங்கே வீர விளையாட்டாக
காட்டு மேட்டிலும் கோட்டைக் கொத்தளங்களிலும்
மூலை முடுக்குகளில் முச்சந்திகளிலும் காலை
மாலை யெவ்வேளையும்
நாளை நிலாவிலும் நடக்கும்
மூர்க்கத் தாக்குதல்கள் - மீட்பறு வியூகங்கள்.
நாய்க் குதறலில் வேய்ங்குழல்கள் நொறுங்கிப் போக
ஆய கீதமெலாம் ஓயாக் கதற லொன்றே யாக
உள்ளொளி யடங்கிப் போக, ஊர் வாய்
அமிலமாக
கொள் ளெண்ணம் செயல் எல்லாம் பெண்ணை
அந்நியமாக்கும் தன்னிடமிருந்தும்.
காணி நிலம் வேண்டவில்லை. அவள்
யோனியும் அவளுக்கில்லை.
அங்கிங் கெனாதபடி ஆணியறைந் தறைந்து

RangaRakes
tamilnavarasam.com

இந்திரக் கண்களாய் அவள் மேனி நிறையும்
யோனித் துளைகள் - ஈ ஊற, எறும்பூற.
திரைதோறும் தீராப் பகடை யுருளும்.
பிரபுதேவா அடவுகளில் பனிக்குடம் தடம் புரள
கருவறுக்கும் தில்லானா தில்லானாக்கள். மாக்களாய்
பெண்டாளும் சண்டாளர்க்கு
எந்நாளும் புரியாது யோனிப் பரிபாஷைகள்.
வானவில்லாய்ப் பெறும் இன்னுறவை அருகழைத்து
உள்வாங்கிக் குழைந்துருகும் யோனிகளுமுண்டிங்கு.
முள்மலராகு மந்த மூன்றாம்பிறைப் பொழுதும்
முதுகழுந்தும் சிலுவைகள்... எங்கும்
தாக்க வாளும் துலாக் கோலுமாய்
பூக்கப் பூக்கப் பூ பொசுங்கும் நாற்றம்
தேக்கித் தேக்கி உயிர்ச்சூழல் பட்டுப் போக-
பண்டு தொட்டு கண்டதுண்டமாகி விட்ட
யோனி மனம் ஊமை ரணம்;
யோனி நலம் உலக பலம்.

## இயந்திரமும் இதயமும்

நாளாகிவிட்டது நட்சத்திரத்தைப் பார்த்து,
நிலவைப் பார்த்து, நதியைப் பார்த்து...
இழப்பைப் பதிவு செய்யவும் வழியின்றி
உறக்கம் இமையழுத்தும் இரக்கமின்றி.
சுலபமாய் நித்திரையிலிறங்குபவரைப் பார்க்க
கலகவுணர்வு கையோங்குகிறது.
தொலைந்ததும், தொலைத்ததும், அறியாரும், புரியாரும்-
அலைந்ததும், அலைத்ததும், அறியாரும், புரியாரும்-
கலைந்ததும், கலைத்ததும், அறியாரும், புரியாரும்-
அறிவாரோ, புரிவாரோ, யாராரோ...



## பாலமும் பயணார்த்தமும்

பாலங்களால் பின்னப்பட்டிருக்கிறது வாழ்க்கை.
பின்னலில் தான் எத்தனை வகை!
தொங்குபாலம், தொடர்பாலம், முட்பாலம், முதலைப்பாலம்
மறுபக்கம் திறப்பற்ற மூளிப்பாலம், முறிபாலம்...
அங்கங்கு ஆயிரம் பாலங்கள் அன்றாடம்
ஆயிரங் காதங்கள் உள்ளும் வெளியும்
களிபொங்கும் கதிகலங்கும்
காற்றுப் பாலமொன்றில் பாதங்கள் வேரூன்ற
கடந்து கொண்டிருக்கிறேன் காலத்தை.
பதியுங் கால் பதிய பாலம் மேலெழுந்து
பிணைந்து நனைந்து நினைவழிய நிமிர்ந்தால்
நடப்பது நதிச்சுழல் மீதாக
ஏகாகிலும் செய்திந்தச் சூறாவளிப் பாலத்தைக்
குரல்வளைக்குள் செலுத்தி உயிர்மூச்சாக்கப்
பார்க்கும் வலி வாழ்வாதாரமாக
ஆகும் சேதாரமெலாம் போகத் தங்குவதும்
சொக்கத் தங்கமாக
அக்கக்காய் கிழிமனதில் புரண்டோடும் பேய்வெள்ளம்.
திக்கழியச் சிக்கித் தவிக்கும் உயிர்தாங்கி
நீலம் பாரித்து நடந்திருந்த நாளொன்றில்
நேரெதிரே நிழல் விரிய, நிமிர்ந்தால் நீ!
இதமாயொரு சிரிப்பில் விரிந்ததொரு
புதுப்பாலம் இருவருக்குமாய்.
தருணங்கள் சிலவற்றில் அதில் நடந்தவாறே
ஒருவருக்கொருவர் சுமைதாங்கிக ளானோம்.

RangaRakes

tamilnavarasam.com

பரிமாறிக் கொண்டோம் அன்போடு அவரவர்
அழுகை அபிலாஷைகளையும்...
இருக்குமோ இப்பாலம் இனிவருங் காலம்?
இற்று விழுந்திடலாம் நடுவழியில்.
விடைநழுவும் பயணம் பழகியபடி வாழ்வு.
இருந்தாலென்ன? இன்றைய நடைக்கான நன்றியில்
பிறக்குமோர் தொழுகை யுனக்காய்:
'கணக்கற்ற நிழற்பாலங்கள் கொண்டிருக்கட்டும்
உனக்குற்ற வழிகள்!'



## உறங்குமுன் சில உப்பங்கழிகள்

தூக்கத்தின் போதத்தில் தானை துறக்கத்
துவங்கியிருக்கும் தானை யானை வந்து மோத
அதன் மேல் திப்புசுல்தான் ரயில்வே கேட் கில்லட்டீனை
கீழிறக்கக் காத்திருக்கத் தப்பினால் பொருதத் தயாராய்
பாண்டியன் இன் ராஜ்ஜியத்தில் உய்ய லாலா
அமர்நாத், வி.வி.குமார், அப்பா, ஆசுபத்திரி, அரசாங்கம்
ஆறடிக்குக் குறைந்த குழி அசைய மறந்த விழி
உறைந்த வழி வாராது போல வந்திராது போன
மாமணியைத் தோற்ற சூற்பை
'மாடர்ன் ப்ரட்' துண்டங்களாய் பிளந்து கிடக்க
கொப்பளிக்கும் குருதி வாழி காவிரியாய் நடக்க
நடிக்க நடிக்கத் தான் இந்த மேடை
நினைவை யிடிக்கத் தான் அந்தப் பால் பால்
மேலும் பா லாடை
காலி வயிற்றில் வெள்ளைக் குல்லாய்
கத்தி கபடா க்ளோரோஃபார்ம் மற்றும்
வாடை முடிந்து விழியில் படிந்து
மரணபயம் நிராயுதம் நிர்பலம்
துர்லபம் துரிதவண்டியில் கரம் சிரம் புறம்
நீட்டலாகாது ஆக மாட்டாதோ
ஏக்கம் கேட்குமோர் கவிதைப்பாட்டு
காலையெழுந்ததும் காற்றலைக் காட்சிகளைக்
கட்டியமைக்க
வெட்டி யொட்டும் புகைவளையங்களாய்
கிட்டியும் எட்டியும் கலையும்

RangaRakes
tamilnavarasam.com

வார்த்தைகள் படிமங்கள் வாழ்க்கைத் தோற்றங்கள்
வாழாத் தேற்றங்கள் வந்தேமாற்றங்கள்
எடுக்கவோ கோர்க்கவோ என்னா லாகுமோ
ஏலாது போகுமோ.... ஒ... ஒ... ஒ...
ஓடும் எண்ணங்களே...
உன்னை விட்டு ஓடிப் போக முடியுமா...
முடியு மென்றால் முடியாது படியு மென்றால் படியாது...
முதுகு ' சொடுக்க சுட்டது சுடாதது ஊதிஊதி
ஔவைப் பேதைக்கு மூச்சவியும். அந்தகாரம்
அவைக்கவியும் அப்போதைக்கு.



## திக்குத் தெரியும் காடுகளும், செக்குமாடுகளும்

அத்தனை அக்கறையோடு குழந்தையைப் பராமரித்துக்
கொண்டிருந்தான் அவன்.
காணக் கண் கோடி வேண்டும்.
மழலையின் அழகு அடிநெஞ்சைத் தொட்டது.
அழுந்த மூடியிருந்தன உள்ளங்கைகள்.
விரலிடுக்குகளில் கசிந்தன வானவில்லின் துளிகள்.
அள்ளிக் கொண்டு வந்திருப்பவை வெள்ளிமீன்களாகத்
தான் இருக்கும்.
நிறைவமைதி கூடக் கூட
நின்றவன் தோள் கண்டு தோளே கண்டு...

பறைமுழங்க வந்தார்கள் பிள்ளை பிடிப்பவர்கள்.
கத்தி, கபடா, வெட்டரிவாள், வீச்சரிவாள்
பத்து நூறு கருங்கற்கள், பதினாயிரம் தோட்டாக்கள்
ஒவ்வொரு கோணிக்குள்ளும்
பத்திரமாயிருந்தன.
சித்திரம் மட்டுமா கைப்பழக்கம்?
குறிபார்த்துப் பின் மண்டையில் எறிந்தார்கள்.
தெரியும், தெறிக்கும் ஒவ்வொரு துளிக்கும்
துளிர்க்கும் தலை நூறு.
இருந்தும் அந்த முகுளப் பகுதி உதிரப்பெருக்கு
கதிகலங்கச் செய்யும்.
கட்டாயம் வலித்திருக்கும் அவனுக்கும்.
காட்டிக் கொள்ளாமல் மந்தமாருதத்தைக் கூட்டி வந்து
குழந்தைக்கு விளையாடத் தந்தான்.

RangaRakes
tamilnavarasam.com

'தலைக்கனத்தைப் பார்' என்று திரும்ப
வளைத்தது கூட்டம்.

'அண்டப் புளுகன் - ஆணறிவானோ
ஈன்றெடுத்தலை? அறிந்தாலும்
அம்மணமாய் நடுவீதியில் பிரசவிக்காமல்
நான்கு சுவர்களின் இருளுக்குள் தாயாகிறவன்
பேயாகத்தான் இருக்க வேண்டும்.
பெற்றெடுத்ததும் குட்டிச்சாத்தான்.

வெட்டிச் சாய்த்திட வேண்டும் வேரோடு
இருவரையும். இல்லை,
ஒருவரையேனும்.
தாயற்ற பிள்ளை தறுதலை.
சேயற்ற சிவம் சவம்.
சங்கு முழக்கு.
கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம்
நடக்கட்டும்.
அத்துவானக் காடு மேய்ப்பனை
மொத்தமாய் முடித்து விடவும்.
'தார்மீக தர்மமெல்லாம் யாருக்கு வேண்டும்?
பேர்பேராய்ச் சொன்னால் ஊர் நம்பித் தீரும்.
கற்ற வித்தையெல்லாம் காட்டிக் கூறும்:
'சுற்றுச் சூழல் அவனால் கெட்டுப் போனது.
எட்டிய தொடுவானெல்லாம் எட்டாமலானது'
கட்டி வைக்க வேண்டும் முச்சந்தியில் அவனை.
முட்டிக்கு முட்டி தட்டினால் போதாது.
பட்டப் பகலில் கழுவேற்ற வேண்டும்.
அவன் மடியில் தவழ்ந்திருப்பது



மதலையல்ல, முதலை.
இரு இரு - முதலை மூச்சு விடும். வேண்டாம்.
பிறிதேதாவது.
புதைத்தால் பிழைத்தெழக் கூடும்.
சிதையேற்றலே உத்தமம்.

சொற்சுள்ளிகளைக் கட்டுகட்டாகக் கிடத்தி
சுண்ணாம்பும், சுடுநெருப்பும் தடவி
தினமொரு வண்ணமாய் அவனைத்
துன்புறுத்தித் தொடரும்
வன்முறைக் கும்பல்.

கண்ணுங் கருத்துமாய் எண்ணியவாறிருந்தான் அவன்-
இன்னருங் குழவியின் இரண்டொன்று மூன்றுகளை.
காலக் கடிகாரம் கண்சிமிட்டிக் கொண்டிருந்தது.
பாலுக்கழும் பிள்ளையின் பசிநேரம்
நாளும் மனப்பாடம்.
அன்பின் வழி அன்பே அறியும்...

முன்னிரவில்
சன்னக் குரலில் மென்மையாய் தாலாட்டிக்
கொண்டிருந்தான்.
கோலால் நெட்டித் தள்ளியது காலாட்படை.

''குழந்தையா இது? எங்கே தோண்டித் தா விழியை;
குரலைத் தனியாக அறுத்துக் காட்டு''
- விரல் நெறித்து சிரித்தார்கள்.
குதம் மிதித்துக் குதித்தார்கள்.
'வாய் திறந்தால் வாயாடி;
வாளாவிருந்தால் வெறும் பேடி...'

RangaRakes

tamilnavarasam.com

நாடி நரம்பெல்லாம் நிரம்புவதை நாடி
சின்ன உயிரின் அசைவுகளை ஒன்றுவிடாமல்
என்றும்போல் பழகிக் கொண்டிருந்தான்
ஆனந்தக் கூத்தாடி.
'சுட்டும் விழிச்சுடர் தான் கண்ணம்மா
சூரிய சந்திரரோ... ஆராரோ, ஆரீரரோ
ஆரடிப்பாரோ செல்லக்குட்டியை...'
வெல்லக் கட்டியிசை மெல்லத் தொட்டசைக்க
துள்ளி வந்தன புள்ளினங்கள்.
புல்லர்க்குப் பொறுக்குமோ? கல்லெறிந்தார் மறுபடி.
மருண்டோடின சில. மற்றவை யங்கேயே
திரும்பத் திரும்ப வலம் வந்தேகியபடி.
பட்சியிறகின் சிற்றிழைக்கும் வக்கிலாக் கூட்டம்
கொக்கரித்தது:

'காண் கண், கேள் செவி எல்லாம்
கட்டிப் போட்டாயிற்று. இனி
நட்டப்பட்டு நலிவுறுவான் இவன்.
கலி தீரும்! பிறகென்ன?
ஆளுக்குப் பிடிமண் அள்ளிப்
போட்டு விட்டால் போயிற்று.

கோமாளிக்கும் வாரிசு உண்டு.
கொலையாளிக்கும் வாரிசு உண்டு.
ஊரான் பிள்ளையை ஆட்டி வதைத்தால்
தன் பிள்ளை ஆன்றோனாகும்.
பழமொழியில் புதுமை பழகுவது மரபு.



தந்தைக்கும் குழந்தைக்கும் இடையேயான
இரும்புப்பூம் பாலத்தின் கனபரிமாணம்
தொப்புள்கொடி தாண்டி
நீலவான் அம்மா அப்பா புடவை பணமாக-
புளிக்கும் பழம்.
'உடைத்து விடல் எளிதெனக்
கடைவிரித்துக் காத்திருப்பார்
கயமை கிலோ என்ன விலை?'
வலித்தழும் கிள்ளை.
வாய்விட்டுச் சிரிக்கும் பிள்ளை.
''உன் தலை''


tamilnavarasam.com

## வேண்டுதல்

நடுத்தெருவா யிருந்தாலும் நள்ளிரவா யிருந்தாலும்
கொடுங்கதிரோன் நடுமண்டை பிளந்தாலும் நகராமல்
கடுந்தவமாய் நெடுநேரம் காத்திருந்து பார்த்திருந்து
குடங்குடமாய் நீர்சுமந்து பொடிநடையாய் போய்வந்து
தடுக்கித் தடுமறியவர் தேகநலன் பழுதடைந்து
கலங்கிக் கண்ணுயர்த்திக் கருமேகம் தென்படாது
பலநாளாய் எம்மக்கள் படுந்துன்பம் விடைபெறவே
தடையின்றி விரைவாகப் பெய்மழையே, பெருங்கொடையே!
உடைநனைய, உயிர்நனைய, ஊர்வினை யெல்லாம் உன்னால்
மறைந் தொழியட்டும் மிகுதயாபரியே, மழையம்மையே!

துளித்துளியாய் நீ வழியக் களிப்பெய்தும் குழந்தைகள்
குதித்துக் குதூகலிக்கும்.
தம் கறைபடியாக் கையேந்தி கனிவோடே நீ வழங்கும்
கவின்முத்து சேகரிக்கும்.
வெளிப்படையாய் சுழித்தோட மாட்டாத எம்போன்றோர்
கிளர்ந்திருப்போம் நீறுபூத்து.
வரமாயொரு சொல் வேண்டி வாழ்ந்திருக்கும் ஏழைக்கவி
திருமனதில் ஊன்றும் வித்தாய், உன்
அருமை பெருமையெலாம் அறிந்தே அழைக்கின்றோம்
வருவாய் மிகுதயாபரியே, மழையம்மையே!

பளிங்குச் சரமாய் நீ இறங்கக் கிறங்கும் உள்ளம் பல
கிளம்பித் தம் நினைவோடையில் மெல்லப் பயணமாகும்.
புனைகதையாய் இறந்துபடும் உறவுமுட்கள் கிழிக்கத்
துடித்தெழும் கண்ணீர் உன்னில் இரண்டறத் தோய்ந்து விடும்.



மனம் வெளுக்கவும் நீயொரு மார்க்கமாவாய் எமக்கு.
முகமறியா சிற்றிதழ் நட்பினர்தம் முழுஉருவாய்
அகமெங்கும் பற்றி நின்றாய் ஆன்றதொரு ஒட்டுறவாய்!
முகமதுவும் ஏசுவும் முத்துமாரி யம்மனுமாய்த்
திகழும் நீயல்லால் வேறொரு தெய்வமில்லை யாதலினால்
பகற்கனவாகாது பொழிவாய் மிகுதயாபரியே மழையம்மையே!

காதம்பல கடந்திங்கே காரியமாற்ற வருவோரும்
வினைமுடித்த கையோடே வசைபாடுவோர் எம்நகரை.
பூக்கடைப் பேருந்தில் வந்திறங்கிய வுடனே 'சீச்சீ,
சாக்கடைச் சென்னை' யென்றே தூற்றுவார் எம்நகரை.
கான்க்ரீட் வனமென்பார்; காயலான் கடையென்பார்.
வாக்குப் பொய்யானவர்கள் வாழுமிடம் என்றுரைப்பார்.
ஆக்கங் கெட்ட தாக்குதல்கள் ஆயிரமி ருந்தாலும்
பார்க்குமிடத்தி லெல்லாமான நந்தலாலாப் பசுமையாய்
நீக்கமற எம்நெஞ்சில் நிறைந்திட்ட பட்டணத்தை
பாழ்வெளியாக்காது காப்பாய் மிகுதயாபரியே மழையம்மையே!

மடைதிறந்து அடைமழையாய் நீ கருணை சொரியும் நேரம்
குடையாய் விரியட்டும் உன் துளிகள் சில பின்னும் சில
குடிசைகளைக் கல்லுவீடுக ளாக்கட்டும் பின்னும் சில
சாலையோர மாந்தருக்குப் போர்வை நெய்யட்டும் பின்னும் சில
ஆறாத் தாகங்களை யடங்கச் செய்யட்டும் பின்னும் சில
தின்னச் சோறு தரட்டும் திக்கற்றோர்க்கு பின்னும் சில
உள்வெளி ஊனங்களைப் போக்கட்டும் பின்னும் சில
சொல்ல வல்லாச் சோகங்களை மாய்க்கட்டும் பின்னும் சில
கல்லாத கேள்விகளில் வல்லமை சேர்க்கட்டும் பின்னும் சில
காசுபணத் தொல்லைகளைக் கரைத் தொழிக்கட்டும் பின்னும் சில

RangaRakes tamilnavarasam.com

செய்யட்டும் இன்னும் பல; கையெட்டட்டும் தொடுவானம்.
மனிதத்தலைகள் மேல் முளைத்த கொம்புகளெல்லாம்
முறிந்து போகட்டும்; நாசமாகட்டும் பாசாங்குக ளெல்லாம்.
இன்னும் பல உய்விக்கட்டும் உன்னை, யென்னை
இம்மண்ணை யெல்லாம்... ஐயோ, நாளும்
எண்ணியெண்ணித் தாளாமல் அனத்தியவா றிருக்கும்
என் மாபிச்சி மனம் கோரும் நாலாகிலும் நனவாக
பாலித் தருள்வாயே மிகுதயாபரியே மழையம்மையே!



## சின்னஞ்சிறு கிளிகளும், ஸிண்டரெல்லாவும்

மாலையானதும் நான்கு குட்டித் தேவதைகள் என்னை
காலவரையறை கூடிய வேலைநிறுத்தத்தில்
ஈடுபடுத்தும்!
மாயக்கோல் கொண்டு கைகளை சிறகுகளாக்கி
கால்களை செதிள்களாக்கி
பறக்கவும் நீந்தவும் தெரிந்த பெறற்கரிய உயிரினமாய்
என்னை யந்த மொட்டைமாடிப் பிரபஞ்ச வாசியாக்கிப்
பெருமை செய்யும்!
ஒரே சமயத்தில் அங்கே வாலற்ற இருகால் குதிரைகள்
முதலைகளாகும்; தும்பிகள் டினோசார்களாகும்!
யாதுமாகி எங்கும் வியாபித்திருக்கும் குட்டித் தேவதைகளோ
அடிக்கொரு தரம் என்னைத் தொட்டுக் கொண்டாடும்!
அவ்வப்போது என்னையண்டிக் கொள்ளும்
மென்பஞ்சுக் கற்றையாய்!

என்னால் தரவல்ல துளியன்பில் களிபொங்கத்
தென்றலைப் பற்றிக் கொண்டு தட்டாமாலை சுற்றும்!
குருவித்தலைப் பனங்காயாய் அவற்றை வெருட்டும்
மொழிமீறிய குறைகளையெல்லாம் கனிவா யொரு
வருடலில் விரட்டி விட முடிவதில் பெறலாகும்
நிறைவெள்ளத்தில் அடித்துக் கொண்டு போகும்
என் உட்கறைகளும் உன்மத்தப் பேய்களும்!
வெள்ளைநிறத்தே தோய்ந்த வர்ணஜாலங்களாய நதக்
கள்ளமில்லாக் கொத்துமலர்ச் சிரிப்புகள்
தீட்டியும் மீட்டியும் கூட்டும் இசையோவியப்
பிரசன்னங்களின்

RangaRakes tamilnavarasam.com

நசையறு நுகர்வுக்குப் போதாது ஆளுக்கு
நாலாயிரங் கண்களும் காதுகளும்!
'ஒனிடா' பூதத்தின் பசியாற்ற மனமுவந்து
ஒரு கவளம் சோற்றைத் தன் உணவுக்குழாயில்
உருட்டிக் கொள்ளும் 'சுலேகா'!
மேரியின் ஆட்டுக்குட்டியைப் பற்றிக் கேட்டே
பிராணவாயுவைத் தனக்குள் ஊட்டிக் கொள்ளும்
ஷகீல்!

வானத்து மேகத்தில் 'ஏசய்யா'வைக் காணும்
அலெக்ஸ்!
நான்காம் வகுப்பு மாணவன் தன்னை நன்கு வளர்ந்த
ஆணாய்ப் பார்க்கும்
உலகநியதியை எதிர்த்துக் கலகம் செய்யும் அர்ஜுன்!
என்ஜின் புகை துலங்க சூக்கும வண்டிகளை
யோட்டுவதில்
இவர்களின் லாவகம் சொல்ல மாட்டாது!
இப்பிறவியிலான முற்பிறவிகளி லொன்றில்
மூன்று வயதுக் குழந்தையாய் என்னோடு
ஏராளம் காடு மலை கடந்தலைந்து காணாமல் போன
இளவரசனைத் தேடிக் கொண்டு வந்த
வளர் இளைஞன் பிரசன்னாவின் கண்களில்
என்னைக் கண்டதும் ஒளிரும் நினைவு பூத்த
நேயத் தண்ணொளி ஒரு கணம் என்னை
ஈரெட்டு வயது குறைந்தவ ளாக்கும்!
மதம் பிடிக்காத இந்த மகானுபாவர்களின் அண்மை
சுகானுபவமாய் நெஞ்சில் வேரடி நீராய் ஊறும்!



வளர்ந்த மனிதர்கள் வரவாக்கும் வேதனைகள் ஆறும்!
கைவசந் தங்காமல் நழுவியோடுங் காலத்தே சிலநேரம்
அங்கலாவண்யங்களை அறவே கணக்கில் கொள்ளாத
இந்த அரிய காதலர்கள் தரும் வரங்களை
மறுக்கும்படி யாகிவிடும்!
அந்நியராகி விட்ட துக்கம் முட்ட
தோள்துவளப் பின்வாங்கி வாயிலோரம்
நன்னம்பிக்கை முனையாகத் திரும்பி எட்டிப் பார்க்கும்
அந்த சின்னவிழித்தலைகள் ஏகமாய் அலைக்கழிக்கும்!
தூலமான ஏதொன்றையும் வேண்டாத அவர்கள் அன்பு
பீலியின் மிகுபாரமாய் மனதை வாட்டும்!
காலச்சுழலில் அவர்கள் என்னைக் கடந்தேகத் தொடங்கியதும்
இனி அவர்தம் பறத்தலுக்கு நான் சிறகல்ல என்ற
விழிப்பில்
வரவாகும் இழப்பை மீறிய விடுதலையுணர்வில்
வழிசெல்வேன் நான் - என்றுமான ஸிண்டரெல்லாவாய்!

RangaRakes
tamilnavarasam.com

## பளிங்கின் கலங்கல்

**மா**றிய வண்ணமிருக்கும் காட்சிகளில் ஒன்றில்
எனக்கானதை ஆற அமர உள்வாங்கு முன்
அடுத்ததிலதைத் தொலைத்து அழுதபடி யிருக்க
இரண்டாவதன் திரை விழுவதற்குள் எட்டாவதன்
பின்னணியிசை யலைக்க
பாத்திர பரிதவிப்பிலும் பார்வையாளப் பரிகசிப்பிலும்
அரங்கின் மேசை நாற்காலி முள்ளொடிந்த கடிகாரம்
பிற நானாவித தட்டுமுட்டுப் பண்டங்களி லெங்கும்
ஒட்டியுமெட்டியுமிருக்கு மென்னைத் தொட்டுணர முடிவதில்
துல்லியமாய்க் கொள்ளும் கள்வெறியில் உன்முகம் திரியச்
சூழும் சாராய நெடியில் பெருங்குமட்ட லெடுக்க
விட்டு விடுதலையாகும் போதையில் விண்முட்டுங் கப்பல்
கண்சிமிட்டலில் கரைதட்டப் பட்ட கால் உடைந்தும்
கடையடைக்கலா காது கண் காது
மூக்கும் நாக்கும் நாகாக்கலும் நடிப்பேயாக
யாதுமான ஊரில் கேளிர் யாவரும்
பாப புண்ணியப் பொதியுப்பிய முதுகுகளோடு
அப்பப்பா நான் அப்பனல்ல ஆயியுமல்ல
நோயும் பேயும் நினைவும் சொப்பனமுமாக
உப்பளங்களி லெல்லாம் சேகரமாகும் சர்க்கரையில்
இக்கரையக் கரையில் வனையப் படுகையிலேயே
உருமாற்றங் கொளும் சிற்ப தர்மங்கள்
சைத்தான்களாயும் சாட்சாத் தெய்வங்களாயும்
போகவும் வரவும் எங்கே என்று
நின்று கொல்லும் நீர்க்குமிழிகளின்



மார்க்கண்டேயப் பொறுப்பாளி யாரோ என்ன பேரோ
என் உன் நானோ நீயோ அவனோ அவளோ
அதுவோ எதுவோ பொதுவோ தனியோ
இனிசெய் விதியோ சதியோ வென்றறியும் கதியற்று
காலாக்னிப் பிரவாகத்தில் அடித்துக் கொண்டோடும்
நாட்களின் தீரத்தில் நிறமிழந்து சிதையும்
ஏகமாய் உற்ற மதப்பும் மிதப்பும் மதியும்
தொலைதூரம் பதிந்திருக்கும் பதைத்திருக்கும் காத்திருப்பு
வாராக் காலங்களுக்காய்
வந்த காலங்களில் நலங்கெடப் புழுதிசேர்
நாதோபாசனத்தில் சிலநேரம் வசமாகும்
ஞானம். போகுமாறில் பகலும் இரவும்
பிரிவும் இணைவும் பிரிவில் இணைவும்
இணைவில் பிரிவும் மாறி மாறி மாறி
ஆள்மாறி பால்மாறி சோமாறி கேப்மாறி
பூமாரி பொன்மாரி காரி ஓரி
பாரியாய் வாரி வாரி வழங்கும் காலம்
பளிங்கின் சேர் கலங்கலாய்.

RangaRakes
tamilnavarasam.com

## ஆனந்த நடனம்

*(சமர்ப்பணம்: 'வீனஸ் வில்லியம்ஸ்'க்கு)*

ஒயிலார்ந்த ஒட்டகக் கங்காரு முயல் தன்
மயில்தோகையை விரித்தாடி விண்ணுயர்ந்த வண்ணம்
உன் நெஞ்சுணார்ந்த வெற்றிக் கணம் விரிபுன்
சிரிப்பில் அழகின் இலக்கணம் துலங்க
அன்று பிறந்ததாய் விகசித்தது லகம் கலகங்கள்
விலக சுமைதாங்கிக் கல் இனங்கண்ட
அமைதி யுள் ளூற அவாவிய வாகையொரு
வலி நிவாரணமா யடுத்துப் பிறந்தாளைத் தடுத்துப்
பெற்ற வெற்றிச் சோக ரோகம் அகல
எத்தனை சிரித்தாய் ஏகமாய் ஆகிய
காலமும் மேலுமுன் கருப்பினம் நித்தம்
பெற்ற பெறும் கசையடிக்குற்ற களிம்பாய்
அற்ப நேரமானாலும் உன்னருங் களி
உளி தோயா உன்னதச் சிற்பமாக
வலைப்பின்னல் மட்டைக்கும் வண்ணப்பந்துக்கு மிடைப்
பட்ட பாதை நீ வளைந்தெழுந்த வேளை
கண்ணுறுத்த மறந்த குட்டைச்சட்டை மீறிய
கால்களில் மான்களின் காலாதீதம் தெரிய
ஆனமுட்டும் தேனொழுகிய மேனி துளிர்த்தோடிய
விலை யறு கலை யுரு வியர்வைக் கிளிஞ்சல்களை
கத்துங் கடலேறிப் பறந்துவந்த நான்
அள்ளிச் சேர்த்த விதம் அறியமாட்டா யாம்
கட்டாயம் சொல்ல வேண்டும் வந்தனமுனக் கொரு
உயிர்த்துளி நல்கியருளி யிந்த முட்டாள்
பெட்டியில் கட்டிய திரிசங்கு சொர்க்கத்திற்கு.



## அகமும் புறமும்

'ஹிட்லர்' இறந்துவிட்ட பிறகும்
நகரும் வதைமுகாம்களில்
ஊன் கருகி யுடலங்களிலிருந்து பிதுங்கி
உயிர் தெறித்து விழுந்த ஐம்பதன் மேற்பட்டோர்
ஐம்பதாயிரங் கோடியின் மேற்பட்டோர் தம்
அகில உலகப் பிரதிநிதிகளாய்.
பத்துத் துப்பாக்கிகளும் துக்கிரிகளும் இருந்தால் போதும்
சுத்த மொட்டைத் தலையன்களும்
சர்வாதிகாரியாகிவிட லாகும்.
நாளும் பட்டினியில் இறப்போர் புள்ளிவிவரங்களில்
கூட்டல் கழித்தல் திறம் கைவரப் பெறும்.
உறும் அதிநெருக்க உறவின் செக்குச் சுழற்சி யழிக்கும்
ஆசுவாசம் சாசுவதத்தின்
பேசுமொழியில் புரிபடாதொழியும் பெருங்
குறுங்கதைகள்
உன் என் கண் வழியாது இறுகிக் கிடக்கும்
கணங்களின் வாசப் பூவும் வீசும்
கையெறி குண்டுகளி லுண்டு-
தின்று தீராப் பாவம்... ஆதாமும் ஏவாளும்
தத்தமது வழி மேவப் பிறந்திருக்காது
வையகம் போலும் கையகம் நாலிருக்க
நன்னுமோ ஒன்றிரண் டெனும் நம்பிக்கை
வழிநடத்த அக புறங்களி லகப்பட்ட உயிர்
மருளும் இருளும் பகலுமாய்
உருளும் பயணத்தில்
இங்குமங்குமாய் முளைக்கும் சில மயானங்கள்

RangaRakes tamilnavarasam.com

சிதையிலிருந்து என் கை கிளம்பி
நெருப்பைத் தள்ளிய வாறு
தன்னைக் கிள்ளிப் பார்த்திருக்கும் தானே
யான பிறிதாய் சிறிதாய் பெரிதாய்
ஆட்சிகள் மாறி மாறி அரங்கேற்றும் எதிர்
பார்ப்புகளி லூறி வரும் ஏமாற்றம் என்றும்
அடிபட்டு மிதிபட்டுக் கைப்பற்றிய காசில்
வலிமறந்த கிரிக்கெட் தாகம்
கானல்நீராகும் சூதாட்டத்தில்
பாதாள உலகையும் படம் பிடிக்கும் தனியார்
அலைவரிசைகளில்
சாணம் மணப்பது தலைப்புச் செய்தியாகும்
கொலையுண்டு தேயும் இலங்கைத் தீவில்
பூச்சூடும் நினைப்புண்டாமோ பேதையர்க்கு?
யாதும் ஊர் யாவரும் கேளிரானதில்
அடித்துக் கொல்ல அனுமதி தேவையில்லை
இல்லாரும் இருப்பாரும் மலிந்த உலகில்
யானை வலையில் சிக்கிக் கொள்ள பூனை
எக்கித் தப்பித்து விடும்.
ஒப்பித்தல் கலையில் தேர்ச்சி பெற்றால் போதும்
ஓஹோவென்றாகிட முடியும்
படியு மென்றால் படியா நெஞ்சின் வசமாகும்
ஒரு துளி வானம் பார்த்துப் பூத்திருக்கும்
கனவில் கோணித் தெரியும்
திருமுகம் அரூபமாய்....

RangaRakes tamilnavarasam.com